REGD. M. 4642

திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 8–2–48 | இதழ் 35

உத்தமர் மறைவால் உலகம் முழுவதுமே

உருகி அழுகின்றது

சக்கர நெறி

16-ம் பக்கத் தொடர்ச்சி

னர், கோலோச்சுபவன், பழங்காலத்து முறையை மாற்றுகிறானே என்று வைதீகர்கள் கோபங்கொண்டனர். கோபத்தை, அதிகப்படுத்துவதாக இருந்தது மன்னரின் மற்றோர் உத்திரவு.

ஜீவஹிம்சை
வேள்வி கூடாது.

தலைமுறை தலைமுறையாக நாம் அனுபவித்து வந்த உரிமைகள், பறிபோய்விட்டன. மதிப்பு மங்கி விட்டது — செல்வாக்கு சிதைந்து விட்டது.

வேள்வியே கூடாது என்றல்லவா வேந்தன் உத்திரவிட்டு விட்டான்.

வேதநிந்தகன்! பாஷாண்டி மார்க்கத்திலே சேர்ந்து கொண்ட மகா பாபி.

மக்களும் அவன்கூடச் சேர்ந்து கொண்டல்லவா கூத்தாடுகிறார்கள்.

யதா ராஜா ததாபிரஜா!

பண்டைக்காலமுதல் நாம் அடைந்து வந்திருந்த பெருமைகளெல்லாம் பாழாகும் காலமும் வந்ததே! நமது முப்புரிக்கு இனி இப்புரியிலே மதிப்பளிப்பார் இல்லையே. ஜாதிஆச்சாரத்தை, குலதர்மத்தை, வர்ணாஸ்ரமத்தை ஏற்றுக் கொள்ள மாட்டானாமே.

அறிவின் ஆதியும் அந்தமும் வேதத்திலே அடங்கி இருக்கிறது. வேதம் அனாதி காலத்தது—அதைக் கற்கவும் அதன்படி உலகம் நடைபெறுவதற்கான உதவி செய்யவுமே, நாம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறோம்....

என்ற உண்மையை ஏற்கமறுக்கிறான்—தைரியமாக மறுக்கிறான்—தர்மராஜ்யமாம் அவன் நடத்துவது—பௌத்தராஜ்யமாம்............புத்தமார்க்கமாம்............

பித்தமார்க்கம் என்று கூறும்........

கூறுவதற்கு இல்லையே! கூறினால், நம்மைக் கேலிசெய்தே ஜனங்கள் சாகடித்து விடுவார்கள் போலிருக்கிறதே.

* * *

ஆத்திரம் மேலிட்ட வைதீகர்கள், ஆளுக்கோர் விதமாகப் பேசினர்—அசோகனை ஏசினர் — கடைசியில் மன்னரிடம் சென்றே கேட்போம், மதிவாணர்களன்றோ நாம், பலகாலமாக இருந்துவந்த முறையை மாற்ற இவன்யார், என்ன அதிகாரம் என்றே கேட்டு விடுவோம், என்று தீர்மானித்துச், சென்றனர்.

அசோகன் அனைவருக்கும் மன்னன், அந்தணருக்கு மட்டுமல்ல! அவனுடைய கண்களின் முன்பு, சகலபிரஜைகளும் ஒன்று தான்—பேதாபேதம் பார்க்கும் பித்தனல்ல-சத்வகுண போதனும் புத்தனின் அடியவன் அசோகன், ஜாதியில் உயர்ந்தவர் என்று சிலரைக்கருதி, உரிமைகள்தரும் முறையை அனுஷ்டிக்கமுடியாது. என் தர்மராஜ்யத்தில், அனைவரும் சமம். என் அன்புக்கு அனைவரும் பாத்திரமானவர்கள்—மக்கள் மட்டுமல்ல—மிருகங்களும்கூட!

காடுகளிலேகூட, நாடாளும் நான், புதுமுறை இருக்கவேண்டும். ஆகவே வீணர் அங்குசென்று களிப்புக்காக வேட்டையாடுவது கூடாது என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறேன்—இது தெரிந்தும்—நாட்டிலே காட்டுமுறை இருக்கவேண்டுமென்கிறீர்! நன்று, நன்று! அசோகன், புத்தனுக்குத் தொண்டன் — மற்ற எவருக்கும் தாசனல்ல.

வேள்வி என்ற பெயரால் மிருகங்களைக் கொலைசெய்வதை நான் கண்டிப்பாகத் தடுக்கிறேன்— அது என் சட்டம்.

* * *

பரம்பரை பாத்யதை, பண்டையமுறை, ஆகியவற்றைப் பற்றி, வைதீகர்கள், வாசாமகோசரமாகப் பேசியான பிறகு, மன்னன் அளித்த, முடிவான பதில் இது. மறுத்துரைக்க, மனமிருந்தும் மார்க்கமின்றி, மருண்டேகினர், இந்த மண்டலம் இனிப் பயனில்லை என்ற எண்ணம் கொண்டு.

* * *

மன்னர்:- சிற்பியே! உமது கலைத்திறன், என்றென்றும் இருக்கும் விதமாகப் பணிபுரியவேண்டும்.

சிற்பி:- ஆ ஹா! சாம்ராஜ்யாதிபதியின் சேவைக்குப் பயன்படாமல், என் கலைக்கு வேறு என்ன வேலை இருக்கிறது. மகராஜ்! எங்கே ஆலயம் அமைக்கவேண்டும்—

மன்னர்:- ஆலயமா! அதற்கல்ல, அழைத்தது. ஆண்டவனுக்குத்தான் கோடானுகோடி ஆலயங்கள் உள்ளனவே—கற்கோயிலும் வேண்டுமோ—மக்களின் உள்ளமெல்லாம் அவனுக்கு உன்னதமான கோயில்களல்லவா.......

சிற்பி - அருமை! அருமை! மன்னர் மன்னா! தங்கள் உரை கேட்டு, என் உள்ளம் பூரிக்கிறது.

மன்னர்:- சிற்பியே! நமது சாம்ராஜ்யத்திலே பல பாகங்களிலே, தர்ம உபதேசம் பொறிக்கப்பட்ட ஸ்தூபிகள் அமைக்க வேண்டும்—அந்தப் பணிபுரியவே, உம்மைக் கேட்டுக் கொள்கிறேன்—அரசுகள் அழிந்துபடும்—அறம் அழியாது நிலைக்கவேண்டும் — அதற்கு உமது கலையைப் பயன் படுத்தவேண்டும். ஸ்தூபிகள்! கோட்டை கொத்தளங்கள் அல்ல! தர்மத்தை மக்களுக்குத் தெரிவிக்கும் ஸ்தூபிகள் ஆங்காங்கு அமைக்கும் காரியத்தை ஆரம்பித்து நடத்தவேண்டும்.

சிற்பி:- இன்றே—

மன்னர்:- நன்று! கலைவாழ்க! அறம் வாழ்க! சென்றுவா! தேவை

(5-ம் பக்கம் பார்க்க)

13-ம் பக்கத் தொடர்ச்சி

கொள்ள வேண்டுமென்றும், இத்தகைய ஏழையினிடம் இரக்கங்காட்டுவதே கிருஸ்தவ மார்க்கமாகுமென்றும் ஒருகடிதம் எழுதினர். கருணை! கிருஸ்வ மார்க்கத்தின் மூலத்தை முறியடிக்கும் ஏட்டை விற்றவனுக்கா இரக்கங்காட்டுவது? முடியாது—என்று கழகத்தார் கூறிவிட்டனர். அங்ஙனமாயின், "வழக்கை நடத்த நான் வாரேன்" என்றார் வழக்கறிஞர். வழக்கு நிற்கவில்லை! நீதிச்சக்ரம் அந்த நோயாளி, நொந்த உள்ளத்தான்மீது ஓடாமலுமில்லை. ஓராண்டு சிறைத்தண்டனை தரப்பட்டது. நன்னடக்கைக்காக ஓராயிரம் பவுன் சொந்த ஜாமீன் கேட்கப்பட்டது. அந்த ஏழை ஓராயிரம்பவுனைச் கண்டதுமில்லை. ஒடிந்த உள்ளத்துடன் சிறையிலே வாடிக்கிடந்தான்.

தாமஸ்பெயின் என்பவர் எழுதிய மனித உரிமைகள் என்ற புத்தகத்தை, விற்றதாக 1817-ல் கார்லைல், என்ற புத்தக வியாபாரி, அவர்மனைவி, அவர் குடும்பத்தினர், பிறகு அவரது நண்பர்கள், பின்னர் அவரது ஆதரவாளர்கள், ஆகிய 150 பேர்வரை, தண்டிக்கப்பட்டனர், கடுமையாக.

பலி பீடத்திலே!

மார்க்க சம்பந்தமாக, இன்றுயார் வேண்டுமானாலும், எத்தகைய அபிப்பிராயத்தை வேண்டுமானாலும் கூற உரிமை இருக்கக் காண்கிறோம். இந்த உரிமையை, மக்கள் எளிதில் பெறவில்லை! பலர் "பலிபீடத்திலே" சாய்ந்தனர்! இரத்தம் சிந்தினர்! சர்க்காரும் சட்டமும் சளைக்காது; தாக்கிற்று. உடல் பொருள் ஆவியை அவர்கள் தத்தம் செய்தனர், தம்மைப் பலி பீடத்திற்குக் காணிக்கையாகக் கொடுத்து, உலகுக்கு உரிமையை வாங்கித் தந்தனர். பலிபீடத்தில் சாய்ந்த கர்மவீரர்கள் எண்ணற்றவர். கடமையைச் செய்கையில் கஷ்டம் வந்தால், கலங்காதிருக்கும் தன்மையைப் பெற. இத்தகைய வீரர்களின் வரலாற்றினைக் கேட்டும், போற்றியும் வருதல் வேண்டும்.

இன்று கத்தோலிக்க மார்க்கம், பிராடெஸ்டெண்டு மார்க்கம் எனக் கிருத்தவ மார்க்கம் இருகிளைகளாகிக் காணப்படுகிறது. அது மதத்துறையிலே மாபெரும் புரட்சியாக இருந்தது. அதற்காக உயிரிழந்தவர் பலர், ஊரைத் துறந்தவர் அநேகர், மண்டை மோதுதலும், படை எடுப்பும், பலப்பல. மன்னர்கள், மக்கள், பாதிரிகள், படித்தோர், பாட்டாளி, பணக்காரர், ஆண்பெண், ஆகிய எவருக்குள்ளும் இருகட்சிகளாகிவிட்டது. இரத்தக் காடாயிற்று ஐரோப்பா! அத்தகைய புரட்சி தோன்று முன்னப், புயல் வீசா முன்பு, முதன் முதலாக, கத்தோலிக்க மார்க்கக் கட்டுதிட்டங்களிலே குறைகண்டு கண்டித்து, மக்களை சன்மார்க்க நெறியினராகச் செய்ய வேண்டுமானால், மார்க்க போதகர்கள், மனமாசு உள்ளவராக, செயலில் சேட்டை கொண்டோராக இருத்தல் கூடாதென்பதை எடுத்துரைத்து, பகுத்தறிவுப் பலகணியின் கதவைத் திறக்கத் துணிந்தார், விக்ளிப் என்பார். அவருக்கு அதனால் ஏற்பட்ட தொல்லை கொஞ்சமல்ல! அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியோர் அடைந்த அவதியும் அளவிட்டுரைக்கக் கூடியதல்ல. விக்ளிப் போதனையிலே ஈடுபட்ட ஒரு வீரன், தையல் தொழில் செய்து காலந்தள்ளி வந்தான் பிரிட்டனிலே. வார்சேஸ்டர் என்ற பகுதியிலே வாழ்ந்து வந்த ஜான் பாட்ளி (John Badly) என்ற இந்த எளியோன், வாழ்க்கையிலே வசதி கிடைக்காது இளைத்தானாயினும், கொள்கையிலே குன்றாத ஊக்கங்கொண்டு விளங்கினான். ஏழை, ஆனால் கோழைத்தனத்தைக் கொண்டானில்லை. வாழ்விலே ருசி இல்லை; ஆனால் கொண்ட கோட்பாட்டிலே அவன் கண்ட ருசி கொஞ்சமில்லை. விக்ளிப் விளம்பிய தத்துவங்கள் அவனுக்குத் தேனினுமினித்திடவே, அவன், அக்கொள்கையிலே உறுதிகொண்டான். பாதிரிமார் உலகுக்கு இந்தப் பாட்டாளி, மார்க்கத் துறையிலே புதுக்கருத்துக் கொண்டவனாக இருக்கும் செய்தி எட்டிற்று. அந்த உலகு சீறிக்குதித்து, "ஆதிவழக்கத்தை மீறுகிறான், அறிவு கொண்டேனெனப்பேசுகிறான், ஏசுவின் பிம்பங்கள் யாமல்லவோ, எம்மை இந்தக் கசடன் தள்ளுவதோ" என்று கொக்கரித்தனர். பாதிரி உலகுக்குப், பட்டந்தரித்தோர் உதவி தந்து வந்தனர், எனவே சட்டம் கிளம்பிற்று. ஜான் பாட்ளியைப் பிடித்திழுத்தது. காண்டர்பரி பிரதம பாதிரியார் கோர்ட்டிலே இந்த 'நீசன்—சிந்தனைக்காரன்' விசாரிக்கப்பட்டான். சொந்தச் சிந்தனை கொண்டு வாழ விரும்புவது நீசத்தனம்! வைதீக உலகின் அகராதிப்படி! பாதிரி முன் நின்ற பாட்டாளி பயந்தானா? இல்லை! பணிந்தானா? இல்லை! குற்றவாளி தான் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. தண்டனை என்னவென்று எண்ணுகிறீர்கள்? அவனைத் தீயிலிட்டு வாட்டி வதைத்துக் கொல்வது; தண்டனை. பிரிட்டனிலே தான், இந்தத் தண்டனை, பிரிட்டிஷ் சர்க்காரால், பிரிட்டிஷ் பாட்டாளிக்குத் தரப்பட்டது, 1410-ம் ஆண்டிலே! தீயிலே தள்ளினார்கள், ஜான் பாட்ளியை! நெருப்பு உடலைத்தானே வாட்டமுடியும்; நினைப்பைக் கருக்கிடமுடியுமா? உடலை, நெருப்புப் பற்றிக்கொண்டு வாட்டிற்று. தீயிலே வதைந்தான், தீரன் அவன், ஆயினும், வலிதாங்காது, கதறினான்! அவன் கூக்குரலைக் கேட்டதும் தம்மைப்போன்ற ஒரு மனிதன் தீயிலே புழுப்போல் துடிக்கிறானே என்று கண்ணீர் விட்டனரா! இல்லை! களித்தனராம், எதற்கு? தீயிலே தள்ளினதும்! தனது தவறை உணர்ந்து, தத்தளிக்கிறான், என்று எண்ணினராம்! தனக்குச் சரி என்றுபட்ட கருத்தை வெளியிடவும், அதன்படி நடக்கவும் உரிமை வேண்டியவன், வெந்துகொண்டிருக்கையில், வேல்ஸ் இளவரசர், பார்த்துக் கொண்டிருந்தாராம்! அவர் முன்னிலையில் தான், இந்தத் தீயில் தள்ளித்தத்துவத் தீட்டைப் போக்கும் திருவிழா நடத்தப்பட்டது! ஜான் பாட்ளியின் கூக்குரலைக் கேட்ட இளவரசர், தீயினின்றும் அவனை வெளியே இழுத்துவிடச் சொன்னார், இனியேனும் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு, மார்க்க நெறியினின்றும் வழுவாது இருப்பதாக வாக்குத் தருவான் என்று நம்பினார். ஜான் பாட்ளீயின் உடலிலே பாதி வெந்துவிட்டது! "குற்றத்தை ஒப்புக்கொள்! குனிந்து நட! கத்தோலிக்க முறையினைக் குறை கூறாதே! கட்டுகளை மீறிய விக்ளிப் காட்டிய வழி செல்வதில்லை என்று வாக்குக்கொடு" என்று கேட்டனர். பக்கத்திலே, நெருப்புக்குழி! எதிரே இளவரசர்! சுற்றிலும் சட்டம், அதன் பரிவாரம்! உடலோ பாதி வெந்துவிட்டது! வேதனையோ சொல்லி முடியாது! ஆனால் ஜான் பாட்ளி, என்ன செய்தான்? உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எண்ணினானா? இல்லை! உரிமை, உயிரினும் மேல் என்று கருதினான் உத்தமன். நொந்தேனாயினும் வெந்தேபோயினும் கொண்ட கொள்கையை விடவே மாட்டேன்! வீர விக்ளிப்பின் வழியைப் பின் பற்றும் நான், உயிரை இனிப்பாகக்கருதி, உடல் எனும் சுமையைத் தாங்கி, உலுத்தனாக வாழ மாட்டேன். நெருப்பு, என்னைப் பாதி வேகவைத்துவிட்டது! முழுவதும் வேகவைத்து, என் உயிரைக் குடித்து, உடலை நீறாக்கட்டும், என் நினைப்பை அந்நெருப்பு நீறாக்காது! நான் பணியேன்! என் கொள்கையைவிடேன்— என்று கூறிவிட்டான். மீண்டும் தீயிலே ஜான் பாட்ளி தள்ளப்பட்டான். வெந்தான், நீறானான்! ஆனால் இன்றும் நாளையும், அந்த வீரன், நம் வணக்கத்திற்

குரியோனாக, சரிதத்திலே நின்று வாழ்கிறான். தீயிலே இடப்பட்ட அவன் உடல், என்றேனும் ஓர்நாள் பிடிசாம்பலாக வேண்டியது, அன்று, சட்டத்தின் கட்டளையால் சாம்பலாயிற்று. அவனது எண்ணமோ, அவன் மறைந்த பிறகும், கொழுந்து விட்டெரிந்து, வைதிகத்தைச் சுட்டுக் கருக்கி, நீறாக்கிற்று. ஜான் பாட்ளி, மாண்டான், மாண்புக்கு மன உறுதி தேவை என்பதை விளக்கிவிட்டு. பலிபீடத்திலே 1410-ம் ஆண்டு சாய்ந்த, ஜான் பாட்ளி, பாட்டாளி என்பது கேட்டு, நாம் பூரிக்கிறோம். பாட்டாளியை, கஷ்டமெனும் தீயிலே தள்ளிவிட்டால், அவன் தன் உரிமையை மறந்து, மண்டியிடுவான் என்று மனப்பால் குடிக்கும் மதோன்மத்தர்களுக்கு, ஜான் பாட்ளி, எமது இனம், பாரீர் அவனது உறுதியை, வெந்தான்! ஆனால் கொண்ட கொள்கையை விடவில்லை என்று பெருமையுடன் பாட்டாளி மக்கள் கூறிடுவர்!

* * *

நம்பிக்கை! மதத்தின் நங்கூரம் இதுதான்! ஆராய்ச்சி எனும் சுழல் மோதுமானால், மதமெனும் ஓடம் கவிழ்ந்துவிடும்! சண்டமாருதம் எனும் மக்கள் அறிவுக் கிளர்ச்சி தோன்றிவிட்டால், மதஓடம் சுக்கு நூறாகிவிடும். எனவேதான், மதபோதகர்களும், மதவாதிகளும், மதத்தைக் காப்பாற்றும் பணியை மேற்கொண்ட அரசாள்வோரும் நப்பிக்கையை வற்புறுத்தி வந்தனர். மதபோதகர்கள், ஏன்? என்ற கேள்விக்கு அஞ்சியதுபோல வேறு எதற்கும் அஞ்சினதில்லை என்னலாம். ஏன் என்ற இடிமுழக்கம் எத்தனையோ மதக்கோட்டைகளைத் தகர்த்தது. எனவேதான், ஏன்? என்று கேட்போனை, நாத்திகன் என்று தூற்றித் தண்டித்தனர். கொடுமை பல புரிந்தோன், கொலை செய்தோன், கொள்ளையடித்தோன் ஆகியவர்கள் பெற்றதைவிடக் கடுமையான தண்டனைகளை, ஏன் என்று கேட்டவர்கள், மத ஏடுகளுக்கு, மதியைக் கொண்டு பொருள் விளக்கினவர்கள், பகுத்தறிவு தேவை என்றுரைத்தவர்கள், பெற்றனர், படாதபாடு பட்டனர்! இன்று அபிப்பிராய சுதந்திரம் அழகுற விளங்கக் காண்கிறோம். அந்தப் பாதை, அந்த உரிமைகளுக்காகப்பலி பீடத்திலே சாய்ந்தோரின் இரத்தத்தால், மெழுகப்பட்டதென்பதை மறத்தல் கூடாது.

மத விஷயமாக ஆராய்ச்சி செய்பவன் மட்டுமல்ல, மனப்பழுதால், ஏதோ உளறினாலுங்கூட, மதவாதிகள் மாபெரும் புரட்சி வந்து விட்டது என்று கருதி, மிரண்டனர். நான் ஏசுநாதரின் தம்பி! என்று உளறினாம் ஒரு பித்தன்! மதம் ஒரு பூச்சாண்டி என்றானாம், ஆராய்ச்சியின் பயனாக அல்ல, மருளால். பித்தனின் பிதற்றல் என்ற போதிலும், மதத்தை இழிவு செய்வதாக இருப்பதால், அவனைக் கடுமையாகத் தண்டித்தே தீரவேண்டும் என்று "நீதிவான்கள்" கருதினராம். 1656-ம் ஆண்டு, டெய்லர் என்ற ஒரு பித்தன், ஏதோ பிதற்றியதற்காக, அவன் மீதுவழக்கு! அதற்குத் தண்டனை! அவ்வளவு கண்ணிமைபோல் காத்தனர் மதத்தை! அதனிடம் மக்களுக்குள்ள நம்பிக்கை கொஞ்சமாவது கெட ஆரம்பித்துவிட்டால், மத ஏற்பாடுகள் மதசூத்ரதாரிகள் ஆகியோருக்கு பல ஆட்டங் கொடுத்துவிடும். ஆகலால், நம்பிக்கையைக் கெடுக்கவோ, சந்தேகம் வரச்செய்தோ, ஆராய்ச்சி செய்தலே முறை என்று கூறியோ, யாரேனும் கிளம்பினால் போதும், மதக்குருமார்களின் குலையே நடுங்கிவிடும். 'கூப்பிடு காவலரை! இழுத்து வா! சழக்கனை! தண்டிக்கவேண்டும் அந்த தர்க்கம் புரிவோனை" என்று கூறுவர்! நீதி மன்றங்களும், "நிந்தனை செய்யும் நீசர்கள்" கிடைத்து விட்டால் போதும், தனது முழு அதிகாரத்தையும் பிரயோகிக்கும்.

* * *

கீசர் என்ற ஒரு கிழவன், மார்க்க சம்பந்தமாக, கட்டுப்பாடான முறையைவிட்டு விலகி, தன் சொந்தக் கொள்கையைக் கொண்டான். உடனே, காண்டர்பரி பிரதம பாதிரியார் அவனை, சமூகப் பிரஷ்டம் செய்து விட்டார். அவன் பிறகு சொன்னான், "பாதிரியார் என்னைச் சமூகப்பிரஷ்டம் செய்து விட்டால் என்ன? ஆண்டவன் என்னைப்பிரஷ்டம் செய்யவில்லை. அவர் அருளால், என் பண்ணையிலே விளைச்சலுக்குக் குறைவில்லை. பாதிரியாரின்பரிவுக்குப் பாத்திரரான என் பக்கத்துப் பண்ணைக்காரருக்குக் கிடைத்ததை விட, பாதிரியாரால் பிரஷ்டம் செய்யப்பட்ட எனக்கு அதிக விளைவு கிடைத்தது நிலத்திலே" என்று கூறினான். கீசர், நாத்திகம் பேசவில்லை! பாதிரியாரின் அருள் கிடைக்காவிட்டாலென்ன, ஆண்டவன் அருள் கிடைத்தது என்றே கூறினான். ஆயினும் அவன் மீது வழக்குத்தொடரப்பட்டது! பாதிரியை இழித்துப் பழித்துப் பேசினான், எனவே பாதகம் புரிந்தான் என்று சட்டம் சீறிற்று. கீசர் சிறையிலே தள்ளப்பட்டான்.

* * *

பார்த்தலோமியோ லிகேட் என்றவர், நல்ல படிப்பாளி! மதநூற்களை நன்கு கற்றுத் தெளிந்தவர். ஏசுவின் விசுவாசி. பைபிளை ஏற்றுக் கொள்பவர். எனினும், அவர் பைபிளின் வாசகங்களுக்குச் சற்றுப்பகுத்தறிவுள்ள வியாக்யானங்கள் தர ஆரம்பித்து, பாதிரிஉலகம் தடுத்தும் சட்டை செய்யாததால், தண்டிக்கப்பட்டார். என்ன தண்டனை? நடு வீதியிலே நிறுத்திவைக்கப்பட்டு, சுட்டுச் சாம்பலாக்கப்பட்டார்! இந்தக் காலத்திலே என்று கருதுகிறீர்கள். 1611-ம் ஆண்டு' 300 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது இந்தக் "கருணை." 1611-ம் ஆண்டு மார்ச் மாதம் 18ந் தேதி, தனது கல்வி கேள்விகளின் பயனாக, நாத்திகம் பேசாது, ஆண்டவனை ஒப்புக்கொண்டு, புதிய தத்துவார்த்தம் பேசிய ஒரே குற்றத்துக்காக லிகேட், நெருப்பிலிடப்பட்டார்! எவ்வளவு நேர்த்தி மதவாதிகளின் கருணை!! அறிவாளியாயிற்றே, ஆத்திக நோக்கத்துடன்தானே அவன் தத்வார்த்தம் பேசுகிறான், என்று சிலர் வாதிட்டபோது, மதசிரேஷ்டர்கள் "இவனுடைய செயலே மிக ஆபத்தானது. ஆத்திகத்தைப் பேசி, நமது அதிகாரத்தை அழிக்கிறான். அது நாத்திகத்திலும் நாசம் செய்யும் விதத்தது" என்றனராம். அவன் நாத்திக விஷத்தை ஆத்திகக் கோப்பையிலே ஊற்றித் தருகிறான் என்றுரைத்தனராம் சில மத மனிதர்கள்! அத்தகையோரின் ஆத்திரம், பார்த்தலோமியோ லிகேட் என்பவரைப் பொசுக்கிவிட்டது. ஆனால் அந்த உடலம் நெருப்பிலே வெந்ததால், உலகில், அறிவு தொடங்கிற்று. அவர் இறந்தது வீணுக்காகவல்ல! வீரர் கோட்டம் புகுந்தார், வீணர் கொட்டம் பிறகு வீழ்த்தப்பட்டது!

(13-ம் பக்கம் பார்க்க)

சக்கர நெறி!

2-ம் பக்கத் தொடர்ச்சி

யான பொருளை உனக்களிக்கச் சொல்லி இருக்கிறேன். தர்மம் தழைக்கட்டும்.

படைகளை ஏவிவரும் முறை மட்டுமே அரசுகளுக்குத் தெரிந்திருந்தது. மன்னன் அசோகனின் சிற்பிகள், புதிய படைத் தலைவர்களாயினர்—எங்கும் தர்மத்தைப் போதிக்கும் கம்பங்கள் எழுப்பினர்—மற்ற மண்டிலத்தார் கண்டு பயன் பெற—கலங்க அல்ல. கலிங்கம், கடுகளவு வெற்றி—இதோ மன்னனின் படைகள் பல்வேறு மண்டலங்களிலே! எங்கும் வெற்றி! எங்கும் வரவேற்பு! எவரும், அசோகனின் மாண்பு பற்றியே பேசுகின்றனர்! அவன் வழி செல்ல, வேந்தர்களும் மக்களும் விரைந்து வருகின்றனர். போதகாசிரியர்களை அனுப்புமாறு கேட்கின்றனர். கடல் கடந்த நாடுகளுக்கும் அசோகன், அவர்களை அனுப்பி வைக்கிறான். போரின்றி பெரும் பெரும் வெற்றிகள் கிடைக்கின்றன.

அவன் அழித்த நகரம் இது! அவன் இடித்த கோட்டை இது!—என்று மட்டுமே, ஒரு அரசனைப் பற்றிப்பேசுவர். இதோ புதுவிதமாக!—பூரிப்புடன்!! இதோ அசோக ஸ்தூபி! — என்று பேசலாயினர், அகமகிழ்வுடன்.

அனைவருமா!-அதுதான் இல்லை!!

அசோகனின் புதிய முறையால், பழைய திட்டங்கள் போயினவே என்று, ஆத்திரமுற்று, ஆத்திரத்தை வெளிக்குக் காட்ட வகையற்ற நிலையில், மனதிலே குமுறியபடி இருந்தனர் வைதீக மார்க்கத்தினர்.

* * *

இவனும் ஒரு இராஜனா! அரண்மனையா இது! ஆடல்பாடல், கேளிக்கை விருந்து, அலங்காரம் அழகு, ஒரு இழவும் இல்லையே. ஓர் மயானக் கோலமாக அல்லவா இருக்கிறது. ராஜ்யம் இருக்கிறது, நர்மதைக் கரை வரையிலே........

பொக்கிஷத்திலே செல்வம் ஏராளமாக இருக்கிறது........

இங்கே அரசன் தானே இல்லை—ஆண்டி அல்லவா இருக்கிறான் அரசபீடத்திலே........

கோயில் கட்டுகிறானா, கும்பாபிஷேகம் செய்கிறானா, திருவிழா உண்டா, ஒன்றும் காணோம்—மானைக்கொல்லாதே, மயிலைக் கொல்லாதே, பொய்யைப் பேசாதே புலாலை உண்ணாதே, அன்பாக இரு அறநெறியை நாடு — இப்படியே பேசிக் கொண்டு இருந்துவிடுகிறான்—அந்தந்த ராஜ்யங்களிலே, அப்சரசு போன்ற ஸ்திரீ ரத்னங்களோடு அரசர்கள் ஜலக்ரீடை ஆடுவதும், ஆனந்தமாக விருந்துகள் நடத்துவதுமாக, ராஜ போகத்திலே இருக்க, இந்த ராஜன்—பிட்சா பாத்திரம் எடுக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி—மற்றக்கோலம் அவ்வளவும் ஆண்டிதான் — அரசனும் அரசன், அசடன்........

காரணம் என்ன இந்தக் கோலம் கொண்டதற்கு........

கண்டுவிட்டானாம் புதிய மார்க்கத்தை-கலிங்கப்போர் அவனுடைய ஞானக்கண்களைத் திறந்து விட்டனவாம்—கபட நாடகம் ஆடுகிறான்—வேடம் போடுகிறான், ஏதோ ஓர் வகைச்சதி!

இதுபோலெல்லாம் பேசிக்கொண்டனர்—ஆதிக்கத்தை இழந்த வருத்தத்தால்.

அசோகன், அவர்களை விரட்டவில்லை—வெறுக்கவில்லை—தண்டிக்கவில்லை —தன் தர்மராஜ்யத்தை பரப்புவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தான். ஆடம்பரம், அடியோடு ஒழிந்தது. அரண்மனையின் கேளிக்கையைக் கண்டு மக்கள்மனம் புழுங்கிய காலம்போய், அரண்மனையல்ல இது, ஆலயம் அன்பாலயம், அறிவாலயம், என்று மக்கள் போற்றும் நிலைபிறந்தது.

இதனைத்தான் வைதீகர்கள், மன்னன் ஏதோ ஓர் சதிச்செயல் புரிகிறான் என்று கூறினர்.

அசோகன், ஒரு சதிச்செயலும் புரியவில்லை.

அவனுடைய தர்மராஜ்யம், அவன் காலத்துக்குப் பிறகு நிலைத்திருக்க முடியாதபடி, நிலைமை ஏற்பட, சதிச்செயல் ஒன்று நடந்தது. வரலாற்றில் விவரம் இல்லை!

சிறப்பு வாய்ந்த சாம்ராஜ்யபதி ஒருவர், தன் பரந்த ராஜ்யம் முழுவதும் நிலை நாட்டிய, அன்புமார்க்கம், ஏன் பட்டுப்போயிற்று! அவருடைய தர்மராஜ்யம், அவருடைய காலத்திற்குப்பிறகு, நிலைக்கவில்லை. அவருடைய ஸ்தூபிகள், பல மண்டலங்களிலே, அமைக்கப்பட்டு, அவருடைய போதகாசிரியர்கள், நாட்டெங்கும் மட்டுமல்ல, கடல் கடந்து சென்றும், அசோகரின் அன்பு மார்க்கத்தைப் போதித்தும், ஏன், அந்த முறை, பிறகு முறிந்துபோயிற்று. அசோக சாம்ராஜ்யம் — அசோக சக்ரவர்த்தி—அவருடைய அகிம்சா மார்க்கம்—என்றெல்லாம், இன்றும் பாராட்ட முடிகிறது—அவர் பெரும் புகழ் பெற்றுவிட்டார் — கலிங்கப் போர் போல அவர் காலமுழுதும் போரிட்டாலும் பெறமுடியாத வகையான கீர்த்தியை அவர் பெற்றார்—அது சரி—அது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது—ஆனால் அவருடைய அரசமுறை—அன்புமுறை ஏன், அவருக்குப் பிறகு இங்கு நிலைக்கவில்லை. அவருடைய மகன் யார்? பட்டத்துக்கு அவருக்குப் பிறகு வந்தவர், அவருடைய மகனா, பேரனா, தம்பியா, என்று விவாதிக்க வேண்டியவிதமாக, அவருடைய குடும்பவிளக்கம் ஏன், நிலை குலைந்துவிட்டது? அரசு அழிந்த காரணம் என்ன? அவ்வளவு ஆற்றலும், அன்புப் பெருக்கும், பிறர் மனதைப் புண்படுத்தாத போக்கும் கொண்ட அரசர் நிலை நிறுத்திய, புத்த மார்க்கம், அவருக்குப் பிறகு, மறையக் காரணம் என்ன?

ஓவிய நிபுணர்கள், காவிய நிபுணர்கள், இதற்குப் பதிலளிக்க முடியாது. வரலாறு பதில் கூறவேண்டும். ஆனால் வரலாறு வாய்மூடிக் கிடக்கிறது. பகுத்தறிவாளர்கள், மிக மிகக் கூர்ந்து நோக்கினால் மட்டுமே, சிறு சிறுஅளவுக்கு உண்மைக் காரணம் தெரிய முடியும். ஏதோ சதிச் செயல் நடைபெற்றது! அன்பு மார்க்கம் அழிந்தது!!

எதிர்காலத்திலேனும் ஆராய்ச்சி வல்லுநர்களும், வரலாற்றுப் போசிரியர்களும், இந்த "ஏதோவொன்று" என்ன என்பதைக் கண்டறிவார்களா? யார், யாரைக் கேட்பது? ஏன்! அசோகரின் தர்மச் சக்கரத்தையே இன்று நாட்டுக் கொடியின் சின்னமாகக் கொண்டிருக்கிற நிலை அல்லவா காண்கிறோம். இப்போதாவது நாம் கண்டறிய வேண்டாமா, அந்தச் சின்னத்தைத் தழுவியுள்ள உண்மைகளை!

திராவிட நாடு

காஞ்சி] 8—2—48 [ஞாயிறு

உத்தமர் சிந்திய இரத்தம்

●

"கிரேக்க நாட்டுக்கே அழியாத கீர்த்தியைப் பெற்றுத் தருவான் இந்த மாவீரன். இவனுடைய ஆற்றலால், அவனி எங்கும், கிரேக்கநாட்டின் புகழ் பரவும். எவ்வளவு அஞ்சா நெஞ்சு! பசி, தாகம், எதையும் பொருட்படுத்தாது, களத்திலே நேரிடும் எவ்விதமான ஆபத்தையும் கண்டு துளியும் கலங்காமல் கடும் போரிட்டு, வெற்றி கண்டான். இந்த வீரனால், நம் தாயகம் தனிச் சிறப்புப் பெறுவது திண்ணம்"

ஆதென்ஸ் நகர மக்கள் அகமகிழ்ந்து பேசினர், ஆற்றல் மிக்க மாவீரனின் தோள் வலிமை பற்றி. "அந்த வீரனாலே தான், நான் உயிர் தப்பினேன். ஆபத்துச் சூழ்ந்திருந்த போது, அந்த ஆற்றலுள்ள நண்பன், என்னைக் காப்பாற்றினான்'!—ஆல்கபயாடிஸ் என்பவன் புகழ்ந்தான்.

"என்னையும் அவனே காப்பாற்றினான்! நானும் செத்திருப்பேன், அவன் சமயத்திலே எனக்கு உதவி செய்ய முன் வாராமற் போயிருப்பின்" ஜெனபன், என்பவனும் பாராட்டினான்.

"படை நிலைகுலைந்து ஓடியபோது, தோல்வி நமது படையைத் துரத்திய போது, அவன், உறுதி தளராமல் நின்றான்—கடமையைக் களிப்புடன் நிறைவேற்றினான்."—வேறோர் வீரனும் புகழ்ந்தான். ஒரு முறை அல்ல, முப்முறை, களத்திலே, தன் தீரத்தைக் காட்டியதால், வீரத்தைப் போற்றி வந்த, பண்டைக் கிரேக்கநாடு, மாவீரனைப் பாராட்டியதுடன், அவன் அழியாப் புகழ் பெறுவான், அவனியில், தாயகத்தின் பெருமையை நிலைநாட்டுவான், தன் தோள வலிமையால், என்று எண்ணினர்—கூறினர்.

அழியாப் புகழ்தான் பெற்றான்! அவனியில், தன் தாயகத்தின் பெருமையை நிலை நாட்டத்தான் செய்தான்—ஆனால் பலரும் எதிர்ப்பார்த்தபடி, வாள் முனையினால் அல்ல—விவேகத்தால்! சிந்தனைச் சிற்பியானார்!!

சாக்ரடீசின் தகப்பனார், ஓர் சிற்பி! கல்லிலே கலையைப் பொறித்தவரின் திருமகன், மக்கள் மனதிலே, மாண்பினைப் பொறிக்கும் மகத்தான கலையிலே, ஈடுபட்டார்—பெரிய வெற்றி பெற்றார்—மாநிலத்தில் மதிவாணர்கள் மதிக்கும் போக்கு இருக்குமட்டும், அவரை மறக்க முடியாது—அந்த அளவு உயர் நிலை பெற்றார்.

கிரேக்க நாடு, வீரர்களின் உறைவிடமாக இருந்தகாலம் அது. படையிலே பணியாற்றுவது, நாட்டுக்காற்றும் கடமைகளிலே ஒன்று. அம்முறைப்படி, சாக்ரடீசும் படையிலே பணி புரிந்தார், தாயகத்துக்காக இரத்தம் சிந்தினார். அவருடைய போர்த்திறனையும், களத்திலே அவர் காட்டிய நெஞ்சுறுதியையும் கண்டவர் வியந்தனர்—கிரேக்க நாட்டிலே அவர் ஓர் ஈடில்லாப் புகழ்வாய்ந்த படைத் தலைவராவார் என்று 'ஆருடம்' கூறினர்.

சாக்ரடீசோ, அவர்கள் எதிர் பார்த்ததைப் போல, கிரேக்கநாட்டுக் கீர்த்தி வாய்ந்தவராக மட்டும் நின்றுவிடவில்லை—உலக உத்தமர் என்று பெயரெடுத்தார்—கிரேக்க நாட்டிலே மட்டுமல்ல, அவர்படை திரட்டியது. உலகெங்கும் படை திரட்டினார்—அவர் வாழ்நாள் முழுவதும் மட்டுமல்ல—இன்றும் அவருடைய படை, பணி புரிந்து தான் வருகிறது-அறிவுப்படை-அஞ்ஞானத்தை விரட்டும் படை!!

* * *

கோப்பையிலே, விஷம்!

அதைப் பருகத் தயாராக இருப்பவர், விவேகி!

இடம், சிறை! செய்த குற்றம்,? அறிவு வளரும்படி செய்ததுதான்!!

குற்றமா அது? அவர்கள் கூசாது அங்ஙனம் கூறினர்.

* * *

மது! மங்கை! மமதையாளர்கள் மாளிகைகளிலே!

அவர்களே, விவேகிக்கு விஷம் தந்தனர். அரசாள்வோர்கள் அவர்கள்! அறிவை அவர்கள், மக்கள் பெறுவதை விரும்பவில்லை. எப்படி விரும்புவர்? அறிவுள்ள மக்கள், இவர்களின் ஆணவத்தைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்களல்லவா? எனவே, அறிவு கூடாது—அறிவை ஊட்டியவருக்கு நஞ்சை ஊட்டு; நாடாள்வோர் என்ற பட்டத்தைப் பெற்ற அந்த நாசகாலர்கள், நஞ்சூட்டிக் கொன்றனர், நாவலனை.

அவர் சிறையில்! இவர்கள் சிங்கார மாளிகையில்!

அவர் கரத்திலே, நஞ்சு கொண்ட கோப்பை — முகத்திலேயோ, மலர்ச்சி.

இவர்கள், கரத்திலே மதுக்கிண்ணம்! மனதிலேயோ, பீதி! ஏனெனில், அவர்கள் அறிவர், தங்கள் செயல், அநீதி, அக்ரமம் என்பதை. ஆயினும், துணிந்து செய்தனர், தீய செயலை—தமது ஆதிக்க வெறியின் காரணமாக — தூயவரைத் துணிவுடன் கொலை செய்தானே, துரோகி கோட்சே, அதுபோல.

பரம்பரை பேசியும், பழிச்செயல் புரிந்தும், பராக்குக் கூறிப் பல்லைக் காட்டியும், பணிவிடை புரியும் பாவையரின் உறவை நாடியும், இலஞ்சம் கொடுத்தும், இலாவண்ய வதிகளை அடுத்தும், மிருக பலத்தைக் காட்டியும், உடனிருந்தோரை வஞ்சித்தும், ஊராள்வோரின் ஆதரவைப் பெற்று, அந்த ஆதிக்கத்தை இழக்க மனமின்றி, எப்போது, எவ்விதத்திலே, அறிவு பரவி, மக்கள், தங்கள் ஆதிக்கத்துக்கு உலைவைத்துவிடுவரோ, என்று அஞ்சிக் கிடந்த பஞ்சைகள், உலகின் ஒப்பற்ற விவேகிக்கு, விஷம் குடித்து இறக்கும்படி கட்டளையிட்டனர்.

அவர்கள் மாளிகைகளிலே, மலர்த் தோட்டங்களிலே உலவினர். பார்ப்பவர் கண்டு அதிசயிக்கத்தக்க படாடோபம்! உலகின் பல பகுதிகளிலே இருந்து, கொண்டுவந்த உடை, உண்டி, குடிவகை! தங்கமுலாமிட்ட இரதங்கள்! அதிலே, தாவிப் பாயும் புரவிகள்! கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர அடிமைகள்! கொஞ்சிக் குலவிட, வஞ்சிகள்!

இவ்வளவு மட்டுமா! போரிலே வெற்றிகள், அதனால் பல விருதுகள்! அரச மன்றத்திலே, மாலை மரியாதைகள்! விருந்து, வைபவம், கேளிக்கை, கோலாகலம்! இவ்வளவு 'ஜொலிப்புடன்' அவர்கள் வாழ்ந்தனர்—ஆனால் மக்கள் அவர்களை அல்ல, ஒரு கிழவரைக் கண்டு, பூரித்துப் பாராட்டி, பின்பற்றி வர

லாயினர்! சீமான்களுக்குச் சீற்றம் எழக் காரணம், இது போதுமல்லவா! அவர்கள், அறியவில்லை, சிறு அளவிலுள்ள வைரத்துக்கு மதிப்பளிப்பர்—பெரிய பாறை, பொறுமைப்பட்டு என்ன பயன்? புள்ளிமான் துள்ளி விளையாடக் கண்டு மகிழ்வர்—புலி, பாய்வதைக் கண்டு, மகிழ முன்வாரார்! ஓங்கி வளர்ந்த ஒதியம் யாருக்குத் தேவை! முல்லைக் கொடியன்றோ தேவை!! அங்ஙனமே மக்கள், ஜொலிக்கும் வாழ்விலிருந்த சீமான்களை மதிக்க மறுத்தனர்; ஒரு கிழவரை, மதிக்கவும், புகழவும், முன்வந்தனர்.

அவர், சாமான்யர் — மாளிகைக்குள்ளே இருந்துகொண்டு, மக்களைக் காண மறுத்திடும் இயல்பினரல்ல— மக்களைக் காணத், தானாகவே செல்பவர், கடைவீதிகளுக்கு, சாலை ஓரங்களுக்கு, சந்தைகளுக்கு! நெரித்த புருவத்தினரல்ல, மக்களிடம் நெருங்கிப் பழகும் இயல்பினர்.

மக்கள், சீமான்களைப் பார்க்கும்போது, ஏதோ, புதுவிதமாகத், தங்களைப் போலல்லாமல், வேறு உருவமாகவே, தெரிந்தனர். அவர்களின் உடலிலே ஒருவகை மினுமினுப்பு! பேச்சிலே, முடுக்கு! கட்டளைகளோ, கண்டிப்பு!—எனவே வெறுத்தனர். இந்தக் கிழவரோ, அப்படி இல்லை—தங்களில் ஒருவராகவே இருந்தார்—தங்களோடு பழகினார் — வலிய வலிய வந்து பேசினார், வகையற்ற பேச்சா, அல்ல, அல்ல! வாழ்க்கைக்குத் தேவையான, விவேக உரைகள் அவை!

அவர் நல்லவர்—எனவே மக்கள் அவரிடம் அன்பு காட்டினர். மக்களின் அன்புக்கு அவர் பாத்திரரானார், அது போதும் அவர்மீது பாய, என்று கருதினர், ஆதிக்க வெறியர்கள்.

அவர்களிலே சிலர், அரச அவையிலே மட்டுமல்ல, ஆலயங்களிலே, மதிப்பான இடம் பெற்றவர்கள். அவர்களின் சொல்லுக்குத் 'தேவதைகள்' கட்டுப்படும்! அவர்கள் தொட்ட புஷ்பம், மகத்துவம் வாய்ந்தது. அவர்களின் வாக்கு, தெய்வீகத் தன்மை பொருந்தியது.

இவ்விதமாகவெல்லாம் பாமரரைப் பல காலமாக, ஏமாற்றி வாழ்ந்து வந்தனர், பூஜாரிக் கூட்டத்தினர்; அவர்களின் ஜெபமாலை, செங்கோலையும் வாளையும், மிரட்டும் அளவு செல்வாக்குப் பெற்றிருந்தது. அந்தச் செல்வாக்கு, இந்தக் கிழவரால், சரியலாயிற்று, மக்கள் மனதிலே இருந்தமூடுபனி, இவருடைய, விவேகக் கதிர்பட்டு, விலகிடவே, ஜொலிக்கும் வாழ்வினர், ஜெபமாலையினர், ஆகியோரின் உண்மைச் சொரூபம், மக்களின் அறிவுக்கண்களுக்குத் தெரியலாயிற்று. ஓஹோ! இவ்வளவுதானா இவர்கள் கதை!—என்று மக்கள் கூறலாயினர்.

இந்த மனத் தெளிவு தந்ததைத் தான், மாபெரும் குற்றம் என்று, மதியீனர்கள் கூறி, மாசற்ற மகானுக்கு, ஒரு கோப்பை விஷத்தைத் தந்தனர். அவர் பருக மறுக்கவுமில்லை—மருளவுமில்லை; மக்களின் மதியை மாய்க்கும் நஞ்சை நீக்கிவிட்டோம், இனி நாம், நஞ்சுண்டு இறந்தாலும் கவலையில்லை, என்று எண்ணினார்—விஷமுண்டு மாண்டார்.

அந்த முதியவரை, மூதறிஞரை, குற்றம் சாட்டிக்கொக்கரித்த கொடியவர்கள், குதூகலமடைந்தனர், ஒழிந்தான், இனி நமது செல்வாக்கு ஒழியாது என்று எண்ணி. பித்தர்கள்! அவர்கள் அறியவில்லை, அவர், இறப்பதற்குள், எண்ணற்ற மக்களின் மனதிலே, குடிபுகுந்துவிட்டார், ஆகையால், அவரைக் கொல்வது என்பது, அர்த்தமும் பயனும் அற்ற காரியம் என்பதை! எனினும் அத்தகைய செயலைச் செய்தனர், செருக்கும் சொகுசும் நிலைக்க வேண்டுமென்று. நிலைக்கவில்லை, நிலைத்து நின்றது, நஞ்சுண்ட நாவலனின் நற்கருத்துக்கள்.

“நாமோ ரணகளச் சூரர்கள், நமக்கு நாட்டிலே, செல்வாக்கு இல்லையே”—என்று பொறாமையுடன் பேசினர் சிலர்.

“நாம் கூப்பிட்ட குரலுக்குத் தெய்வங்கள் ஓடி வருகின்றன. அப்படிப்பட்ட நமக்கு, அந்தச் சாமான்யனுக்கு உள்ள அளவு செல்வாக்கு இல்லையே”—ஆத்திரத்துடன் பேசினர் வேறு சிலர்.

“அதுசரி — இப்படியே பேசிக்கொண்டே இருந்தால்...............” எவனோ ஒரு கொடியவன், தூண்டலானான்.

“எப்படியாவது முதியவனின் செல்வாக்கைத் தொலைத்தாக வேண்டும்”—ஆதிக்க வெறியன் கூறினான்.

“நமது வீரம், தீரம், செல்வம் அந்தஸ்து எதையும் காட்டி, இந்தக் காரியத்திலே வெற்றி பெறுவதற்கில்லையே” தர்பார் சுந்தரர் கூறினர் இது போல். கோயிற் பூனை, “எமது மந்திர உச்சாடனமே பயன்படாதபோது உங்கள் மாளிகைச் சாமான் என்ன சாதித்து விட முடியும்” என்று கேலி பேசிற்று நரிக் குணம் படைத்த ஒருவன் சொன்னான், “அவனுடைய செல்வாக்கை அழிக்க முடியாது. அழித்தாகவேண்டுமானால் ....அவனையே தொலைத்தாக வேண்டும்.”

எப்படி?—ஆவலுடன் கேட்டனர், சதிகாரர்கள்.

“வழி இருக்கிறது.” என்றான் வஞ்சகன். வழியும் கண்டுபிடித்தான். நாத்திகன் இந்த முதியவர்—ஒரே குற்றச்சாட்டு!! ஐந்நூறு பேர் கொண்ட மன்றத்தின்முன்பு, அழுக்காறு கொண்ட மெலிடஸ், அறிவின் எல்லை கண்ட அண்ணல் மீது இந்தப் பழியைச் சுமத்தினான். ஆற்றோரத்திலும், ஆலய வாயற்படியிலும், கடைவீதியிலும், பிற இடங்களிலும், நமது நாட்டு வாலிபர்களைச் சந்தித்து, அவர்களிடம் சாகசமாகப் பேசி, மனதை மயக்கி, நமது மதிப்பு வாய்ந்த மார்க்க போதனைகளை, வழிபாட்டு முறைகளை, நாம் வழிபடும் தெய்வங்களை, நிந்தித்தும், சந்தேகித்தும், கேலிபேசியும் கண்டித்தும், நாத்திகத்தைப் பரப்புகிறான் இந்த நீசன்”—மெலிடஸ், ஆண்டவனுக்காக வாதாடும், அருள்மொழியாளன் போலப் பேசினான், அந்த அறங் கூறும் அவை முன்பு.

“நாத்திகத்தைப் பரப்புகிறான் என்று பேசின மெலிடஸே, தன் வாதத்திலே மற்றோர் பகுதியில், புதிய தெய்வத்தை உபாசிக்கச் சொல்கிறான் இந்த ஆசாமி, என்றும் கூறினான். இரண்டு குற்றச்சாட்டுகளும், ஒன்றுக்கொன்று முரண்படுகின்றனவே, என்பது பற்றி, மன்றத்தினர் சிந்தித்தனரா! இல்லை! பொறாமை, கப்பிக்கொண்டிருந்தது அவர்களை. பொல்லாங்கு இழைப்பது என்று முடிவு கட்டிவிட்டனர்.

* * *

“அவராலன்றோ நாங்கள் அறிவின் மேம்பாட்டினை அறிய முடிந்தது”

“சிந்தனைச் செல்வத்தை எமக்கு அளித்த செம்மலாயிற்றே அவர்”

“எதையும் ஆராய்ந்துபார்; திடீர் முடிவுக்கு வராதே. யாரோ சொன்

னது என்று பயங்காதே; என்று எடுக்குரைத்து அறிவுக் கண்களைத் திறந்த அன்பராயிற்றே"

"எல்லாம் தெரிந்ததுபோல இருந்த எமது மமதையகத்தைத் தமது நுட்பமான கேள்விகளால் போக்கி, நுண்ணறிவினை எமக்கு அளித்த விவேகியையா இப்படிப் பழிப்பது"

"அறியாமையை மாய்த்தவரை, மாய்ப்பதா! இது அக்ரமம்! கொடுமை! அநீதி!"

இளைஞர்கள், மனம் நொந்து பேசினர்—ஏசினர்—அழுதனர்!

ஆணவக்காரர்கள் சிரித்தனர் "பயல்கள் பதறுகிறார்கள்! பதறட்டும்! கதறிக் கொண்டிருக்கட்டும்! அவ்வளவு மயக்கம் அவனிடம்! எப்படி, நம்மை மதிப்பர் அவன் மரணத்துக்குப் பிறகு இந்தக்காளைகளை நாம் கட்டுக்குக்கொண்டுவரலாம்" என்று எண்ணி இறுமாந்து கிடந்தனர்.

வெற்றி பெற்றோம், வீழ்த்திவிட்டோம் விவேகியை, என்ற நினைப்பும், மீண்டும் தமது செல்வாக்கை நிலை நிறுத்த முடியும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது என்ற போதிலும், மாபாவிகள் மனம்பதறாமல், விஷம் ஊட்டச் சொன்ன போதும், மனம் கலங்காமலிருந்த மதிவாணரின் உருவம் அவர்களின் மனக்கண் முன் தோன்றிய போதெல்லாம், மகிழ்ச்சி மறைந்து, வெட்கமும் வேதனையும் பிறந்தது. போதைகொண்டு, அதனைப் போக்கிக்கொள்ள முனைந்தனர்—முடியவில்லை.

அந்த மன்றத்திலே 220 பேர், சாக்ரடீஸ், குற்றவாளி அல்லவென்று கூறினர். 281 பேர் குற்றவாளி என்றனர்— மிகச்சிறிய அளவுதான், பெருவாரி ஓட்டுகள்! இதை நினைக்கும் போது, மமதையாளர்களின் செவியிலே, யாரோ கேலிக் குரலிற் பேசிச் சிரிப்பது போன்ற ஒலி விழலாயிற்று. நாத்திகன், வேதநிந்தகன், ஆச்சார அனுஷ்டான விரோதி, மாயாவாதி, மனமருளை உண்டாக்கியோன், இளைஞர்கள் மனதிலே புரட்சி தூவினோன்—என்றெல்லாம் குற்றம் சாட்டி, விளக்கி விளக்கிப் பேசி, நாட்டுச்சட்டம், மதம், அதன் பாதுகாவலர், எனப் பலவற்றைத் துணைக்கு அழைத்து, மிகவும் பிரயாசைப்பட்ட பிறகு, அறுபது அதிகப்படி ஓட்டுக்களே கிடைத்தன!

எவ்வளவு ஆதரவு இருந்திருக்கிறது, அந்த ஆண்டிக்கு!!—என்று எண்ணும்போதே அவர்களின் ஆணவம் கூடச் சற்று, பயந்து பதுங்கிக் கொள்ளும்நிலை இருந்தது. எனினும், எப்படியோ ஒன்று வெற்றி கிடைத்துவிட்டது—வீழ்த்திவிட்டோம், சாக்ரடீசை, என்ற எண்ணம், அவர்களுக்கு.

வீரம் ஒருபுறம், கலை மற்றோர்புறம் ! கிரேக்கநாடு, இந்தஇரு அணிகலன்களைப் பெற்றுப் பெருமை அடைந்தது; சாக்ரடீசின் நாட்களிலே, புதியதோர் அணிகலனை கிரேக்கநாடு தேடலாயிற்று — அறிவுத் தெளிவு—ஆராய்ச்சி மனப்போக்கு!

மதம், வழிப்பாட்டு முறை, வணக்கத்துக்குரிய உருவங்கள், அவைகளைக் கட்டிக் காக்கும் அதிகாரம் படைத்த குருமார்கள், அவர்கள் பிறப்பித்த கட்டளை, எனும், இவைபற்றி எல்லாம், ஆராயவேண்டும், என்ற எண்ணம் அரும்பிய காலம். எதையும், விளங்கிக் கொண்டே நம்பவேண்டும், எதற்கும் பொருள் காணவேண்டும், என்ற கருத்தும், முறையும், தவழ்ந்த நேரம். போரிலே வெற்றி பெற்ற சாக்ரடீஸ் இந்தப் புதுப் போரிலே மும்முரமாக ஈடுபடலானார்—மரணத்தின் பிடியிலே சிக்கிக்கொண்ட நிமிஷம் வரை, சாக்ரடீஸ், இந்த ஆராய்ச்சியை நிறுத்தவில்லை. எப்படிப்பட்ட சமயத்திலே, என்பதைக் காணும்போது, எவருக்கும் மயிர்க் கூச்செறியும். வெறியர்களின் சதியால், விஷம் ஊட்டப்படவேண்டும் என்ற தண்டனை தரப்பட்டு, சிறையிலே இருந்த போதும், சிந்தனைச் சிற்பி, தன் பணியை, தன்னைக் காணவந்தவர்களிடம் செய்து வந்தார். விஷத்தையே பருகிவிட்டார்—உலவுகிறார் சிறைக் கோட்டத்தில், சிறைக்காவலன்சொன்னான், "விஷம் வேலையைத்தொடங்கும், நீர் உலவிக் கொண்டே இரும், கால்கள் மரத்துவிடும்சமயம்பார்த்துப் படுக்கையிலே சாயும்—பிறகு..........." அவன் விம்மினான். அவர் விஷத்தைக் குடித்துவிட்டு, உலவுகிறார்—எதிரே அவருடைய நண்பர் சிலர், அழுதகண்களையும் துடைக்காமல், நிற்கின்றனர்—உலவியபடியே அந்த உத்தமர், அப்போதும், பணிபுரிந்து கொண்டிருந்தார்.

"ஐயோ! பேரறிஞரே! உம்மை இழக்க எப்படி எமக்கு மனம் வரும். உம்மைப் புதைக்க, எப்படி நாங்கள் சம்மதிப்போம்."— என்று கூறி, நண்பர் கதறுகிறார்கள். அப்போதும் சாக்ரடீஸ், அறிவுத்துறைக்குத்தான் அரும்பணியாற்றலானார். கதறும் நண்பரைப் பார்த்து, என்ன சொன்னீர்? "என்னைப் புதைப்பதா! யார் சொன்னார்கள் உமக்கு? நண்பரே! பொருளை விளங்கிக் கொள்ளாமல் பேசுவதா! அழகல்லவே! இதோ என்னைப்பாரும், என்னையா புதைக்கப் போகிறீர்? என்னை! என்னை! நண்பரே! அந்தப் பதம், எதைக் குறிக்கிறது? உயிரையா, உடலையா—"— என்று கேட்டுவிட்டு, அரிய ஆராய்ச்சியுரை கூறிவிட்டு, "சாக்ரடீசைப் புதைக்கிறோம் என்று கூறுதீர். தவறு. சாக்ரடீசின் உடலைப் புதைக்கிறோம் என்று கூறும், அதுதான் பொருளுள்ள பேச்சு" என்று, சிரித்துக் கொண்டு கூறினார். உள்ளே விஷம் வேலை செய்கிறது—விவேகியோ, தமது வேலையை அந்தச்சமயத்திலும் செய்யத் தவறவில்லை.

"அறமன்றத்தினரே! என் மீது தொடரப்பட்டுள்ள இந்த வழக்கை, விசாரித்து, முடிவு கண்டு, முதியவன் பிழைத்துப்போகட்டும், என்று மன்னித்துவிட நீங்கள் சம்மதித்தாலும், நான் மீண்டும், இதே வேலையைத்தான் தொடர்ந்து செய்து வருவேன்" என்று உருட்டும் விழியுடன் இருந்த அந்த உலுத்தர்கள் முன்பு பேசினவர் அந்த உத்தமர்.

மேலிடஸ் என்பான், அவர் மீது குற்றம் சுமத்தி, கிரேக்க நாட்டு முறைப்படி ஐந்நூற்றொருவர் கொண்ட அறமன்றத்தின் முன்பு நிற்க வைத்தபோது, சாக்ரடீஸ் "எனக்கு எழுபது வயதாகிறது ஆயிற்று, நீதி மன்றத்தில் நான் நிறுத்தப்பட்டது, இதுதான்முதல் முறை." — என்று கூறினார். அவ்வளவு முதியவர்! அதுவரையில் அவர் ஆற்றி வந்த அரும்பணி, எல்லாம் அறிந்தவர்கள், எதையும் கூற வல்லவர்கள், எம்பெருமானின் விருப்பத்தை அறியக் கூடியவர்கள், என்று பெயர் பெற்றவர்களின், உண்மை உருவத்தை ஊர்மக்கள் உணரவும், அவர்கள் உண்மையிலேயே, எத்தர்களாகவோ, ஏமாளிகளாகவோ, அஞ்ஞானிகளாகவோ உள்ளனர் என்பதை அறிந்து எள்ளிநகையாடவுமான நிலையைத், தமது உரையாடல்கள் மூலம்—சொற்பொழிவுகள் கூட

அல்ல— கேள்வி, பதில், என்ற முறையின் மூலம், உண்டாக்கி வந்ததுதான். கல்லூரி இல்லை, கலாபவனம் அமைக்கவில்லை, தத்துவ ஏடுகள் இயற்றவில்லை கவிபுனையவில்லை, ஊரிலே உலவுவது, உண்மை அறிவின் இலட்சணத்தைப் பற்றிய ஆராய்ச்சி நடத்துவது, அதன் அவசியத்தை மற்றவர்கள் அறியச் செய்வது, எனும் இதுதான் அவர் செய்து வந்த வேலை. ஆனால், ஆதென்ஸ் நகரிலே, இந்தவேலை, எப்படிப்பட்ட நிலையை உண்டாக்கி விட்டது!

"அதோ வருகிறானப்பா, ஆண்டி! வா, வா, போய் விடலாம், இல்லையானால், ஏதாவது கேள்வி கேட்டுத் திணற வைப்பான்—நம்மை முட்டாளாக்கிக் காட்டுவான்—காளைகள் கை கொட்டிச் சிரிக்கும்" என்று கூறி, ஓட்டம் பிடிப்பர்; யார்?, மகா பண்டிதர்கள், சாஸ்திர விற்பன்னர்கள், காவிய கர்த்தாக்கள், குருமார்கள், என்போர்கள்!!

சாக்ரடீஸ், இதனை, வழக்கு மன்றத்திலேயே விளக்கிக் காட்டினார்.

"நான் ஏதோ மாயாஜாலம் செய்பவன், என்று மெலிடஸ் குற்றம் சாட்டுகிறான். தவறு. எனக்கு அவை ஏதும் தெரியாது. ஆனால் எதெது தமக்குத் தெரியும், என்று கூறி, நிபுணர்கள் என்று பெயரெடுத்தார்களோ, அவர்களைக் கண்டு நான், அவர்கள் அறிந்திருப்பதாகக் கூறப்படும் விஷயமாகப் பேசுவேன். பேசும்போது, அவர்கள் எந்தத் துறையிலே தாம் மேதைகள் என்று கூறிக் கொள்கின்றனரோ, அந்த விஷயத்திலேயே அவர்கள் உண்மை அறிவு பெற்றவர்கள் அல்ல, என்பது விளங்கிவிடும்—இதை நான் எடுத்துக் காட்டுவேன்—இந்த உரையாடலைக்கேட்டுக்கொண்டு நிற்கும், இளைஞர்கள் சிரிப்பார்கள். அவர்களின் சிரிப்பு, அந்த நிபுணர்களின் சீற்றத்தைக்கிளறிவிடும்! இவ்வளவுதான் நடைபெற்றது. வேறு இல்லை" என்று கூறினார்.

இவ்வளவுதான் நடைபெற்றது என்று, சாதாரணமாகக் கூறிவிட்டார். ஆனால், இவ்வளவு போதாதா, புரட்சியைஉண்டாக்க! சிரித்தார்கள் இளைஞர்கள், மூதறிவு பெற்றவர்கள் என்று கூறிக்கொண்டவர்களின் அறியாமையைக் கண்டு!! அந்தச் சிரிப்பு, சாமான்யமானதா? புரட்சியின் குரலல்லவா அது?

புலி! புலி! என்ற கூக்குரல் கேட்கிறது. பலரும் பயந்து ஓடுகின்றனர் அந்த இடத்தை விட்டு. ஒரு வீரன் மட்டும் அஞ்சாமல்சென்று, அருகே நின்று கவனித்துவிட்டு, ஓடுபவரில் ஒருவரை அழைத்துச் சென்று, எதையோ காட்ட, அவர், அடடே! இதுதானா! இவ்வளவுதானா! என்று கூறிச் சிரிக்கிறார், என்றால், அந்தச் சிரிப்புச் சாமான்யமா?

சிரிக்கிறானே! நாம்பயந்து ஓடுகிறோம், அவன் சிரிக்கிறான்! ஏன்?—என்று ஓடுபவர் சிந்திப்பர்.

"ஏனப்பா சிரித்தாய்?"—சிலர், அவனைக் கேட்பர்.

"அதுவா! நண்பர்களே!..........." அவன் தன்வார்த்தையை முடிக்காமல், மீண்டும் சிரிக்க, "என்னதானப்பா உன்சிரிப்புக்குக் காரணம்?" என்று ஆவல் அதிகமாகிக் கேட்பர். சிரமப்பட்டு, சிரிப்பை அடக்கிக்கொண்டு, "புலி, புலி, என்று எண்ணிக்கொண்டு நாம் பயந்து ஓடினோமே, விஷயம் தெரியுமா? அது புலியல்ல! புலித்தோல் போர்த்த கன்று!" என்று கூற, "அப்படியா? உண்மையாகவா?" என்று கேட்டுக்கொண்டு, ஓடினவர்கள் நிற்க, முதியவர், தோலைஎடுத்து எறிந்து விட்டு, கன்றை அவர்கள் எதிரிலேயே கொண்டுவந்து நிறுத்தி "இதோ புலி!" என்று கேலியாகக் கூறினால், நிலைமை எப்படி இருக்கும்! ஓடினவர்களில் சிலர், அதன் வாலைப்பிடித்திழுப்பர், சிலர், காதைத் திருகுவர், சிலர், புலித்தோலை எடுத்துப்பார்ப்பர்— அதுமட்டுமா, புலித்தோலைப் போர்த்து, கன்றினைப் புலிஎனக் கூறி, கலக்கத்தை உண்டாக்கினவன் எங்கே என்றல்லவா, தேடுவர். இது சாமான்யமான, நிலைமையாகுமா? அவன் சிக்கினால் என்ன ஆகும்!

அவ்விதமான சிரிப்பு, சாக்ரடீசால் ஏற்பட்டது, கிரேக்கக் கடைவீதிகளில்.

மெலிடஸ், இந்த உண்மையை எப்படி உரைக்கமுடியும்! அவன், இதற்குப் பதிலாக, சாக்ரடீஸ் ஓர் நாத்திகன், என்று குற்றம் சாட்டினான்.

"பலருடைய அறிவீனத்தைநான் வெளிப்படுத்தி விட்டேன். கோபம் என்மீது அவர்களுக்கு. ஆனால் உண்மைக்காரணத்தை எப்படிக்கூறுவர், வெட்கமாக இருக்குமல்லவா! அதனால் அவர்கள், சாக்ரடீஸ் ஒரு நாத்திகன், கிரேக்கநாட்டுச் சனாதனமுறையைக் கெடுக்கிறான், என்று கூறுகிறார்கள். இதுதான் சூட்சமம்" என்று சாக்ரடீஸ் சொன்னார். தன்பணியின் மேம்பாட்டினை விளக்கினார். அது நாட்டுக்கு எவ்வளவு அவசியம் என்பதுபற்றி வலியுறுத்தினார்.

"பல மூள்ளசிங்கம் படுத்துஉறங்குகிறது—தன்பலம் அறியாமல். ஓர், ஈ, கடித்து எழுப்புகிறது தூங்கும் சிங்கத்தை. அது போல், ஆற்றல்மிக்க ஆதென்ஸ் நகரமக்கள் அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் உறக்கநிலையை மாற்ற நான் அவர்களைத் தட்டி எழுப்புகிறேன. சுலபத்திலே, ஈயை, நசுக்கிவிடலாம். ஆனால், தூங்கும் சிங்கத்தை எழுப்ப, வேறோர் ஈ, வருமா?—என்று யோசிக்கவேண்டும். இதை யோசித்தால், நீங்கள் என்னை நசுக்கமாட்டீர்கள்"—என்று கூறிப்பார்த்தார்.

"ஏன் நான் இப்படி அலைகிறேன்? என் ஆற்றலைக்காட்டி அரசசபையிலே இடம் பெறக்கூடாதா? செல்வமும் சுகமும் பெற்று வாழக்கூடாதா?

ஏன், இவைகளைவிட்டு, ஆண்டிக் கோலத்திலே இருந்துகொண்டு, ஆதிக்கக்காரர்களின் கோபம் என்மீது பாயும் என்பதை அறிந்தும், இந்தக் காரியத்தைச் செய்கிறேன்?

எனக்கு என்ன இலாபம் இதனால்?"—என்று, கேட்டார்.

"என்னை நாத்திகன் என்று குற்றம் சாட்டுபவர்களுக்கு உள்ள தெய்வபக்தியை விட, எனக்குத் தெய்வபக்தி திடமாக உண்டு" என்று தெளிவாகக் கூறினார்.

அவர், தெளிவாகப் பேசப்பேச, அவரை எப்படியும் தண்டித்தாக வேண்டும் என்ற தீர்மானத்தோடு வந்தவர்களுக்கு, மேலும் திடம் உண்டாகி விட்டது. மிகமிக ஆபத்து இவனை விட்டுவிடுவது, என்று எண்ணினர். சாக்ரடீசின் அறிவு, அவர்கள் உள்ளத்திலே அவ்வளவு அச்சத்தை உண்டாக்கிவிட்டது. எவ்வளவு நேர்மையான, மறுக்கமுடியாத, காரணங்களைத், துளியும் கலக்கமின்றி, விளைவுபற்றிய எண்ணமே கொள்ளாமல் எடுத்துரைக்கிறான், நம் எதிரில். இப்படிப்பட்டவன், மக்களிடம் பேசிக்கொண்டிருந்தால், நமது நிலை, அதோகதியாக வேண்டியதுதான் என்று எண்ணினர், சாக்ரடீஸ் குற்றவாளியே என்று தீர்ப்பளித்தனர்.

மரணதண்டனை தரவேண்டும் — மெலிடஸ் சொன்னான். வேறு சிலர், சாக்ரடீஸ், வேறு விதமான தண்டனை ஏதேனும் கேட்டுப் பெறட்டும்—என்று இரக்கம் காட்டிப்பேசினர். அவர்களின் இரக்கத்தை, சாக்ரடீஸ் பயன்படுத்திக் கொண்டாரா? இல்லை! அறிவின் மேம்

பாடு, அவர்களால் அவமதிப்புக்கு ஆளாக விடுவாரா?

"எனக்குத் தகுந்த தண்டனையை, நானே கூறிப் பெறலாம் என்றா கூறுகிறீர்கள்?"—சாக்ரடீஸ் கேட்டார்.

"ஆம்!"—ஆணவத்தோடு பதில் வருகிறது, அற மன்றத்தில்.

சாக்ரடீசின் நண்பர்கள் ஆவலுடன், அவர், என்ன கூறப்போகிறார் என்பதைக் கவனிக்கிறார்கள்.

மரண தண்டனை வேண்டாம்—சிறை போதும்—நாடு கடத்தி விடுங்கள்—அபராதம் விதியுங்கள், என்று, ஏதேனும் ஒருவகை கூறலாம். எதுவும், மரணத்தை விடக் கொடுமையிலே குறைவல்லவா! அதனால் நண்பர்கள், மனம் படபடவென்றடித்துக் கொள்ளும் நிலையிலே நின்றனர். உண்மையிலேயே, என்னை நாட்டைவிட்டு வேண்டுமானால் போய்விடச் சொல்லுங்கள், என்று கேட்டு, அந்தத் தண்டனையைப் பெற்றால், சாக்ரடீசுக்கு, ஒரு குறைவும் இல்லை—தேசேலி போன்ற பல அரசுகள், அவரை வரவேற்கக் காத்துக்கொண்டிருந்தன. பல நண்பர்கள், தங்கள் சொத்து முழுவதையும் அவருக்குக் காணிக்கையாக்கச் சித்தமாக இருந்தனர். சாக்ரடீசுக்கும் இவை தெரியும். அவர், என்ன தண்டனை விதிக்கும்படி கேட்டார்?

"தேரோட்டுவதில்வல்லவன்,குதிரை ஓட்டுவதில் வீரன், களத்திலேமாவீரம் காட்டினேன், ஆகியவர்களுக்கு, அவர்களின் திறமையைப் பாராட்டியும், அந்தக் காரியங்களை அவர்கள், முட்டின்றி நடத்தவும், கிரேக்க நாட்டு அரசு நடத்தினோர், மானியம் தருவது வழக்கம். மக்களின் உண்மையான நன்மைக்காக அறிவுத் தெளிவுக்காக, அவர்கள் தமது கடமையை உணரும் படி செய்யும் காரிய மாற்றும், இந்த நல்லாசானுக்கு மானியம் கொடுத்து, என் வாழ்நாள் முழுவதும் இந்தப் பணி புரிய வசதி செய்து தாருங்கள். நீங்கள் எனக்கு அளிக்கவேண்டிய தண்டனை, அதுதான்."

சாக்ரடீஸ், இவ்வாறு சொன்னபோது, அறமன்றத்தினரின் மனம், எப்படி இருந்திருக்கும்!

குற்றம் செய்தான் — வாலிபர்களின் மனதைக் கெடுத்தான்—பழைய ஐதீகங்களைக் குலைத்தான் — இதற்கு, மரண தண்டனை விதிக்கிறோம், என்னமோ, பாபம், கிழவனாக இருக்கிறானே, வயது 70க்கு மேலிருக்குமே, இந்தப் பருவத்திலே, என் மரண தண்டனையை அனுபவிப்பது — பிழைத்துப் போகட்டும் என்று மனம் இளகி, வேறு ஏதேனும் தண்டனையை நீயே கேள், என்று கூறினால், கொஞ்சமும் மதியாமல், துளியும் கலங்காமல், மானியம் கொடு என்று கூறுகிறானே இந்தக் கிழவன், எவ்வளவு நெஞ்சழுத்தம்—என்று எண்ணினர்.

மரண தண்டனை விதித்தனர்—சாக்ரடீசுக்கு, விஷம் கலந்த பானத்தைக் கொடுத்து சாகச் செய்வது, என்று முடிவு கூறினர். அறிவு கலந்த உரைகளை, நாள்தோறும் கிரேக்க வாலிபர்களுக்குத் தந்த நாவலனுக்கு நஞ்சு!! ஆனால், சாக்ரடீஸ் நடுங்கவில்லை—நகை முகத்தோடு, அவர்களை நோக்கிக் கூறலானான்;

"எனக்கு மரண தண்டனை விதித்தீர்கள்—இதனால் உங்களுக்குப் பெரிய இலாபம் இல்லை. நான் கிழவன். முடிவு நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. நீங்கள் இந்தத் தண்டனை தராவிட்டாலும், இயற்கையாகவே நான், சீக்கிரத்தில் இறந்துபோவேன். எனக்கு மரண தண்டனை விதித்து, பெரும்பழியைத் தேடிக் கொள்கிறீர்கள். நான் ஞானியல்ல! ஆனால், எதிர்காலத்தவர் உங்களுடைய செயலைக் கண்டித்துப் பேசுவர்—அப்போது, என்னை ஞானி என்று கூறுவர். ஞானியைக் கொன்ற மாபாவிகள் என்று உங்களை ஏசுவர். நீங்கள் இந்தப் பழியைத் தான் தேடிக்கொள்கிறீர்கள்.

என்னைக் கொன்றுவிடுவதால், நீங்கள் என்னைவிட்டுத் தப்பிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறீர்கள் அல்லவா? பைத்தியக்காரத்தனம்! நான் தூவிய எண்ணங்கள், கையாண்ட முறை, அழியாப் பொருள்களாகும். நான் இருப்பதால், மற்றவர்கள், இந்த முறையைக் கையாளவில்லை—என் மரணத்துக்குப் பிறகு, என் வேலையைத் தொடர்ந்து நடத்த, மேலும் தீவிரமாக நடத்தப் பலர் முன்வருவார்கள். அவர்களை நீங்கள் வெல்ல முடியாது. அறிவைப் பரப்பும் என்னைக் கொல்வதால், அறிவைக் கொன்றுவிட முடியாது. ஆதென்ஸ் நகர மக்களே! நீங்கள் சாக்ரடீசிடமிருந்து தப்ப முடியாது!!"—என்று கூறினார், அறிவின் மதிப்பை அணுவளவும் விட்டுக்கொடுக்க மறுத்த மாவீரர்.

இரண்டோர் சொட்டுக்கண்ணீர்,சற்று தழதழத்த குரல், பரிதாபப் பார்வை, போதும், அவர் தப்பித்துக்கொள்ள விரும்பினால். வீரமாகப் பேசி வந்தான், மரண தண்டனை என்று சொன்ன உடனே, கண்ணீர்விட்டான், கருணைகாட்டினோம், என்று கர்வத்துடன் கூறிக்கொள்வர்—உலக வரலாற்றிலே ஓர் களங்கம் ஏற்பட்டிருக்கும் உறுதியைக் கடைசிவரை காட்டியதன் மூலம், அந்த உத்தமர், உலக வரலாற்றுச் சுவடியிலே, ஒரு செந்நிற ஏடு கோத்தார்—தன் இரத்தத்தைப் பூசி.

"மரணத்தைக் கண்டு மருளமாட்டேன். மரணத்துக்குப் பிறகு மக்கள் நிலை என்ன, என்பது அறியேன் ஆகவே நான் அறியாத ஒன்றுக்காக அஞ்சுவானேன்? கடமையைச் செய்வேன்—மரண பயமின்றி." என்று கூறினார்.

மரண தண்டனை விதித்திருக்கிறார்கள், மனம் கலங்காமல் அந்த மதிவாணர், மரணத்தைப் பற்றிய ஆராய்ச்சியை அவர்கள் முன்னிலையிலேயே நடத்துகிறார், மார்பில் பாய்ந்த எதிரியின் அம்பை, எடுத்து, அதன் கூர்மை, அமைப்பு முறை, அதை எய்த முறைஆகியவற்றைக் களத்திலே ஆராயும், மாவீரன்போல.

"மரணத்தை ஏன் துன்பமாகக் கருதவேண்டும்? என்ன நேரிடுகிறது, மரணத்தால்? ஆத்மா, உடல் யாவும் அழிந்துபோகும் — முடிவில் ஒன்றும் இல்லை, என்று கருதலாம். அப்படியானால், மரணத்தால் துன்பம் ஏது? ஏதாவது மிச்சமிருந்தால்தானே, அந்தப் பகுதி, அழிந்த பகுதிபற்றி எண்ணி வருத்தப்பட"

அவ்விதமின்றி, "மரணம் என்றால், உடல்தான் அழியும் ஆன்மா அழியாது, அந்த ஆன்மா, மேலுலகம் செல்லும் என்று கூறுகிறார்களே, அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டால், அப்போதும் மரணத்துக்குப் பயப்படவோ, துன்பமென்று கருதவோ, என்ன அவசியமிருக்கிறது. மேலுலகம் சென்று, முன்னோர்களைக் கண்டு, பேசி, அவர்களோடு சேர்ந்து வாழ என்ன கசப்பு! பெருமை அல்லவா அது! இதுஎப்படித் துன்பமாகும்?"

மரணத்தைப் பற்றி, இந்த இருவிதமான கருத்துத் தவிர வேறுஇல்லை. இருவிதமான கருத்திலே, எது சரியாக இருப்பினும், மரணத்தைப் பற்றிப் பயப்படவோ, அதைத் துன்பமாகக்கருதவோ, அவசியமில்லை.

இவ்விதம் ஆராய்ச்சிஉரை அளிக்கிறார், நஞ்சுதரத்தீர்மானித்த நாசகாலர்களுக்கு.

இந்த உறுதியுடனேயே இறுதிவரை இருந்தார். மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, ஒரு மாத காலம் சிறையில் இருந்தார்—ஒவ்வோர் நாளும், நண்பர்களுடன் ஆராய்ச்சி உரைதான். கடைசி நிமிஷம் வரையில் அவர், அறிவு விருந்து அளித்துக்கொண்டே இருந்தார். அவருக்கு அவர் நாட்டுத் துரோகிகள் அளித்தது விஷம்!

ஆம்! உலகைத் திருத்த உழைப்பவருக்கு உலுத்தர் தருவது, நஞ்சு. நஞ்சுண்ட நாவலன், சொன்னான்.

'இதற்கு முன் எவ்வளவோ சத்புருஷர்களைப் பாமர ஜனங்கள் கோபத்தினாலும், அஞ்ஞானத்தினாலும், வதைசெய்திருக்கிறார்கள். நானும்ஜனங்களுடைய அறியாமைக்கு இரையாவேன். எனக்குப்பிறகும் எவ்வளவோ பேர் தர்மத்திற்காகப் பிராணத்தியாகம் செய்யப்போகிறார்கள். இதுநிச்சயம்"

2400 வருஷங்களுக்குமுன்பு, கிரேக்க நாட்டிலே, மூடத்தனமிகுந்த மக்களை,

சுயநலச்சதிகாரர்கள் தூண்டிவிட்டு வந்த நாட்களிலே பேரறிஞர், விஷம்கொடுத்துக் கொல்லப்பட்டபோது, இந்த அறிவுரையைக் கூறினர்.

நமது நாட்களிலே கண்டோம், அவர் உரைத்தது, உண்மையே என்பதை— உத்தமரின் மறைவுகண்டு.

சாக்ரடீசின் நாட்களிலேயாவது, பாமரர் அதிகமானதெளிவு பெறாததால், சதிகார மெலிடஸ் போன்றூரால், நஞ்சிட்டுக்கொல்ல முடிந்தது, நாவலனை.

நமது நாட்களிலேயோ, மக்களிடை, தெளிவு, 2400 ஆண்டுகட்டு முன்பு இருந்ததைவிட, எவ்வளவோ மடங்கு அதிகரித்து விட்டது. மக்கள் மறைந்த உத்தமரை, போற்றத்தவறவில்லை. மக்களின் சீற்றத்தை மெலிடஸ் கிளப்பிவிடும் அளவுக்கு அந்தநாளில், மூளையில் மூடுபனி இருந்தது. இன்று நிலைமை வேறு. மக்கள் அந்த உத்தமரைப் போற்றுவது அறிந்தும், மாபாவி கோட்சே துணிந்தே கொலை செய்திருக்கிறன்—வெறியால் —பித்தத்தால் —மிருகத்தன்மையுடன்.

நாவலனுக்கு நஞ்சூட்டவும் ஒருநாட்டு மக்களின் மனம் இடம் தந்ததே, சில நயவஞ்சகர்களின் சூழ்ச்சியினுல், என்று எண்ணும் போதே, வேதனையுடன் வெட்கமும் சேருகிறது. இப்போது நடைபெற்ற கொடுமையோ, மக்கள் மலர் தூவிட முன்வந்த நிலையில், மார்பிலே குண்டுவீச, மாபாவி ஒருவன் கிளம்ப முடிந்ததே, என்பதை எண்ணும்போது, வெட்கமும் வேதனையும் சேர்ந்து தாக்குவது மட்டுமல்ல, நாம் நாட்டிலேதான் வாழுகிறோமா, அல்லது காடா இது, என்று கதறிக்கேட்கும் நிலைமை பிறக்கிறது.

அன்று விஷம்! இன்று துப்பாக்கி! அன்றுமெலிடஸ்! இன்று கோட்சே! இந்தக்காட்டு முறையை அடியோடொழித்துக் கட்டாவிட்டால், நாட்டிலே உள்ள நாம், எப்படிக்காட்டிலே உள்ள மிருகங்களைவிட மேல் என்று கூறமுடியும்—எதிலே நாம் மேலானவர்கள்!

உத்தமரின் மறைவு, நமக்கு இந்தச் சிந்தனையையாவது கிளறவேண்டும். அப்போதுதான், அவருடைய இரத்தம் வீண் போகவில்லை, என்று ஏற்படும். மிக மிக எளியவாழ்க்கையில் இருந்து கொண்டு, எந்த முறையையும் பழைய ஐதீகத்தையும் ஒரே அடியாகஒழித்துவிடும்,புரட்சித் திட்டம்கூட அல்ல, எந்த முறையிலும் புதிய தூய்மையும், பயனும் ஏற்பட, எம்மதமும் மக்களை உய்விக்கும் கருவியாக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தோடு, இந்துமதத்திலே ஏறிப்போயுள்ள இழுக்குகளை நீக்கவேண்டுமென்று, உழைத்தஉத்தமரை, அவர் எந்த மதத்தினராயினும், சாதியினராயினும் மக்களே, அவர்கள், நிம்மதியுடன், மனிதஉரிமையுடன் வாழ இடம்செய்து தருவதே அறவழியாகும், என்று கூறியதற்காகக் கொலைசெய்வதா!

எண்ணும்போதே நெஞ்சுபதறுவது மட்டுமல்ல, இவருடைய இன்சொல் முறைக்கே, இந்த அளவு வெறிச்செயல் செய்யும் போக்கைச் சிலர், எதிர்நடவடிக்கையாகக் கொள்கிறுர்களே, நாட்டிலே தலைகீழ மாற்றம், புரட்சித்திட்டம், காட்டு ராஜாக்கள், மேட்டுக் குடியினர், ஆகியோரைக் கட்டுக்குக்கொண்டு வரும் மாறுதல், என்பனபோன்றவைகள் நடைபெற்ருக வேண்டுமே — தன்னுட்சி நல்லாட்சியாக வேண்டுமானுல், அப்படிப்பட்ட காரியங்கள் செய்யும்போது,இன்று நாம் காணும் காட்டுப்போக்கு இருக்குமானுல், கோட்சேக்கள் கிளம்புவரே!— என்ன செய்வது, என்பதைப்பற்றித்தான் கண்ணீரைத் துடைத்துவிட்டு, நாட்டினர், நன்கு யோசிக்கவேண்டும். சமதர் மக்கட்சித்தலைவரான, ஜெயபிரகாஷ்நாராயணன், "பலகாலமாகவே, இந்து மார்க்கத்தைக்கொண்ட சமுதாயத்திலே, முற்போக்குச்சக்திக்கும் பிற்போக்குச் சக்திக்கும், போர் நிகழ்ந்து வந்திருக்கிறது" என்று கூறுகிறுர். அந்தப்போரிலே, பிற்போக்குச்சக்தி, ஆதிக்கவெறி, குண்டுகளைப்பாய்ச்சிற்றுஉத்தமர்மார்பில். இந்து மார்க்கத்திலே மட்டுமல்ல, உலகிலே,சமுகங்கள் பலவற்றிலேயும், இந்தப்போராட்டம் நடைபெற்றிருக்கிறது. உத்தமர்கள், கோட்சேக்களால் கொல்லப்பட்டுள்ளனர். உலகம் உயர்நிலை அடைய, மக்கள் மேன்மையுற, முற்போக்குப் பாதையே வேண்டும்—அந்தப்பாதைக்கு, அடையாளக்குறிகளாக, உத்தமர்கள் சிந்திய இரத்தக் கறைகளே உள்ளன.

✻

கரூர் வழக்கு.

—✻—

கரூர் கலவர வழக்கில், தண்டிக்கப்பட்ட தோழர்கள் P. K. ஐயா, ஆகியவர்களுக்கு, 'அப்பீல்' நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, சென்னை, பிரபல பாரிஸ்டர் சோமசுந்தரம் அவர்கள், அப்பீலுக்கு ஆஜராக இசைந்துள்ளார். மேற்படி வழக்கை நடத்தச் சுமார் 4000 ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரூர் வைஸ்—சேர்மனும், மேற்படி வழக்கில் விடுதலையானவருமான தோழர்ரத்தினம் அவர்கள், பெரியாரை, திருச்சியில் சந்தித்து, இது சம்பந்தமாகப் பேசினர். வழக்கு நடத்த, பணத்தை, கரூர்த்தோழர்கள் திரட்டவேண்டும் என்று கூறி, கீழ்க் கோர்ட்டிலே வழக்கு நடந்தபோது, கட்சியின் சார்பில் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை தரப்பட்டதை நினைவூட்டி, முன்பணமாக முன்னூறு ரூபாய் கொடுத்தனுப்பினர். கரூர்த்தோழர்களின் நிலைமையோ, வழக்குக்கு உதவி நிதியைத் தேடக்கூடியதாக இல்லை.

கீழ்க்கோர்ட்டிலே வழக்கு நடைபெற்றபோது, நீதிதேவன் மயக்கம் எனும் நாடகத்தைத் திருச்சியில் நடத்தி, அதன் மூலம் இரண்டாயிரம் ரூபாய்க்கு உதவித்தொகை தரப்பட்டது.

மறுபடியும், நாடகம் நடத்துவதிலே, சிரமம் இருக்கிறது என்பதைக் கரூர்த் தோழர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கரூர் சென்று, இது விஷயமாக நண்பர்களைக் கலந்து பேசினேன், 28ந் தேதி. உருவான பலன் அதிகம் இல்லை -என்ற போதிலும், ஆர்வமிக்க மாணவர்களும், வாலிபர்களும், பிப்ரவரி 24ந் தேதி, 500 ரூபாய் உதவிநிதி தருவதாகக் கூறினர்—அந்த நிபந்தனையின் பேரில், நானும், அன்று கரூர் சென்று சொற்பொழிவாற்ற இணங்கினேன்.

செலவுத் தொகையையும் கூறிவிட்டேன்—வரவுக்கு வழி இல்லை என்பதையும் சொல்லியிருக்கிறேன். -கரூர்த் தோழர்கள் பணம் திரட்டும் நிலையிலே இல்லை என்பதையும் கூறி இருக்கிறேன். என்ன செய்யலாம்? அவர்கள் சிறையில்! நாம் வெளியே!! ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டிய பிரச்னை.

என்னைப் பொறுத்தமட்டில், என் நண்பர்களின் உதவியைக் கொண்டு, இரண்டாயிரம் ரூபாய் கிடைக்கக் கூடிய அளவுக்கு, நாடகம் நடத்தியாயிற்று.

சிறையிலே உள்ள தோழர்கள், தங்களுக்குச் சகல உதவியும்செய்ய, சக்திவாய்ந்த கட்சி வெளியே இருக்கிறது, என்ற நம்பிக்கை, ஊட்டும் உற்சாகத்தையே உறுதுணையாகக் கொண்டுள்ளனர்.

என்ன செய்ய எண்ணுகிறீர்கள்?

அண்ணாதுரை.

திருவத்திபுரத்தில் தமிழ்த் திருநாள்

காஞ்சி கலியாணசுந்தரம், துவக்கிவைத்தார்.

திருவத்திபுரத்தில் 18—1—48முதல் ஒருவாரம் பொங்கல் விழா வெகு சிறப்பாகத், தமிழ்நாட்டில் வேறு எங்கும் காணப்படாத முறையில் கொண்டாடப் பெற்றது.

முதல் நாள் துவக்க விழாவிற்குத் தோழர் காஞ்சி. கலியாணசுந்தரம் தலைமை வகித்தார். தமிழ்ப்பெரியார் திரு. வி க. அவர்களும், தோழர் அன்பழகன், M.A. அவர்களும் சொற்பொழிவு ஆற்றினார்கள். தலைவர் முடிவுரையில், கல்வி கற்பது எல்லாவற்றிலும் முதன்மையானது என்றும், பற்பல விஷயங்கள் குறித்துப்பல போராசிரியர்கள் எழுதிய நூற்களைக் கற்பதினால் அறிவுப்பெருக்கத்திற்கு ஆக்கம் ஏற்படுமென்றும், ஒரு பொருளைக் குறித்துப்பலர் கண்ட முடிவுகளைத் தெரிந்துகொள்வதின் மூலந்தான், அதே பொருளைக் குறித்து நாம் கொண்டுள்ள கருத்தின் தன்மையையும் தெரிந்து கொள்ளமுடியுமென்றும், அவ்வாறு கற்பதின்மூலந்தான் ஒழுங்கான சிந்தனை வளரமுடியுமென்றும், ஆதலால் கல்வியைப் பழிப்பதோ, அவ்வாறு கற்றவர்களைப் புறக்கணிப்பதோ சமுதாயவளர்ச்சியை உண்டாக்காது என்று குறிப்பிட்டார். பழைமையைப் போற்றிக் கொண்டே புதுமையையும் வரவேற்பது பொருந்தாது என்றும், பழைமையைத் தகர்த்தெறிவதின் மூலந்தான் புதுமைக்கு இடம் தரவேண்டுமென்றும் மேலும் குறிப்பிட்டார். தொழிலாளர் பிரச்னை குறித்தும் மிகத்தெளிவாக எடுத்துக்கூறினார்,

இரண்டாம்நாள் பெரியார் அவர்களின் பேருரை நடைபெற்றது. அவர் சொற்பொழிவின்விரிவு 'விடுதலை'யில் வந்துள்ளது.

மூன்றாம் நாள் தோழர்கள், C. N. அண்ணாத்துரை, காஞ்சி கலியாணசுந்தரம் ஆகிய இருவரும் பேசினர். தலைமைதாங்கியவர் அவ்வூர் நகரமன்றத் தலைவர்.

நான்காம் நாள் காஞ்சி தோழர் C. P. இராஜமாணிக்கம் அவர்களும் அவரது சகாக்களும் "இரணியன்" நாடகத்தை நன்கு நடித்தனர்.

ஐந்தாம் நாள் புதுவைத் தோழர் விநாயகம் அவர்களால், தக்க இசைக்கருவிகளுடன் இசைவிருந்து அளிக்கப்பட்டது.

ஆறாம் நாள் சென்னைத் தோழர் N. ஜீவரத்னம் அவர்களாலும், அடுத்தநாள் திராவிடர் கழக மத்தியக் கமிட்டியின் தலைவர் தோழர் T. P. வேதாசலம் அவர்களாலும், பேச்சு விருந்துகள் நடைபெற்றன.

எட்டாம் நாள் நகைச்சுவைஅரசர் N.S. கிருஷ்ணன் அவர்களால் செவிக்கும்கருத்துக்கும் சுவையான விருந்தளிக்கப்பட்டது. மற்றநாட்களைவிட, அன்று விழா உச்ச நிலை பெற்றுவிட்டது

உள்ளூர்த் திராவிட இளைஞர்களின் முயற்சி பாராட்டுதற்குரியது என்பது மட்டுமல்லாமல், ஓரளவிற்குப் பிறரால் பொறாமைப்படக்கூடியதுமாகும். இவ்வாண்டு தமிழ்விழாவில் முதன்மை இடத்தைத் திருவத்திபுரம் பெற்றுவிட்டது என்று கூறலாம்.

விளம்பரம்

காஞ்சிபுரம் கந்தன் மில்ஸ், லிமிடெட்

1948 பிப்ரவரி 2-ந்தேதி காலை 10 மணிக்குக் காஞ்சிபுரம் கந்தன் மில்ஸ் ரிஜிஸ்டர் ஆபீஸ் கட்டிடத்தில் திருவாளர்கள் T. சண்முகம், A. சீனிவாச முதலியார், அ. அண்ணாமலை முதலியார், K. G. எத்திராஜ், D. V. D. முனுசாமி சா, அ. க. தங்கவேல் முதலியார், கோ. சி முருகேச முதலியார், கோ. அருணாசல முதலியார், ஆகியவர்கள் திரு. T. சண்முகம் அவர்கள் தலைமையில் ஒன்றுகூடி, அடியிற்கண்ட விஷயங்களை ஸ்பெஷல் தீர்மானங்களாகத் தீர்மானிக்கப்பட்டது.

(1) தற்சமயம், மில் நடத்தச் சர்க்கார் இதுவரையில் கதிர்கள் ஒதுக்கிக்கொடுக்கவில்லை. அதனால் மிஷினரி முதலானது வரவழைக்க முடியவில்லை. கட்டிடம் கட்டுவதற்குக், காலநிலவரம், கூலி, சாமான் முதலானவை, அதிகமாய் இருப்பதால், இதுவும் சாத்தியமில்லை. ஆகையால் பங்குதாரர்களின் பணத்தை வீணாக முடக்கி வைப்பது யாதொரு பிரதி பிரயோசனமுமில்லாமல் இருக்கிறது. ஆகையால் கம்பெனியைக் கலைத்துவிட்டு, பங்குதாரர்களுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடலாமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(2) திரு. அ க. தங்கவேல் முதலியாரைக், கம்பெனியின் லிக்விடேட்டராக நியமிக்கலாமாகத் தீர்மானிக்கப்பட்டது. அதற்குப்பிரதி பலன் இல்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இங்ஙனம்,

T. சண்முகம், A. சீனிவாசமுதலியார் D. V. D. முனுசாமிசா, அ. அண்ணாமலை முதலியார், கோ, அருணாசல முதலியார், K G. எதிராஜ், கொ. சி. முருகேச முதலியார்; அ. க. தங்கவேல்முதலியார்.

4—2—48

லிங்கம்.

தோழர் S. V. லிங்கம், மூன்றுமாத காலமாக நோய்வாய்ப்பட்டு வருந்திய வண்ணம் இருக்கிறார். மூலவியாதி போன்ற நோய்க்குச் சிகிச்சை பெற, சென்னை ராயப்பேட்டை வைத்யசாலையில், தங்கி ஆப்ரேஷன் செய்துகொண்டு படிப்படியாகக் குணமாகிவிடும் என்ற நம்பிக்கையுடன், வெளிவந்தார். ஆனால் மீண்டும் கடுமையான நோய்க்கு ஆளாகி, காஞ்சிபுரத்தில் டாக்டர் சிற்சபை அவர்களின் இல்லத்திலே, வைத்திய உதவி பெற்றுவந்தார். இரண்டுவாரத்தில், மீண்டும், நோய் குறையலாயிற்று. ஆனால், முதுகு எலும்பிலே, ஏற்பட்டவலி, அதிகமாகிப், படுக்கையிலேயே கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டது இதற்கு மின்சார முறையில், சிகிச்சை பெற, மீண்டும் சென்னைக்கு, 'ஆம்புலன்ஸ்'காரில் அழைச்செல்லப்பட்டு, இப்போது, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஹாரிஸ்வார்டில், இருக்கிறார். அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடியான இளைப்பு. கடுமையான நோய். —

தேவை

தோழர் க. அன்பழகன் M. A., அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும்

"புது வாழ்வு"

என்னும் மாத இதழுக்கு ஏஜண்டாக இருக்க விரும்புவோர், கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவும்.

"புது வாழ்வு" அலுவலகம்
10, வேளாளத் தெரு
புரசைபாக்கம், :: சென்னை— 7

செங்கல்பட்டு ஜில்லா ஜட்ஜு கோர்ட்டு.

வார்சு சர்டிபிகேட் மனு. நெ. 4 of 48.

நோட்டீஸ்

P. ருக்மணி என்கிற கோமளம்மாள்,
மனுதார் :

S. ராஜகோபாலாசாரியார்
கவுண்டர் மனுதார் :

14—8—46ல் இறந்துபோன தன் கணவன் P. R. பார்த்தசாரதி அய்யங்காருக்குச் சேரவேண்டிய கடன்களைக் குறித்து தனக்கு இந்தியன் செக்‌ஷன் ஆக்ட்10-வது பிரிவின்படி வார்சுசர்ட்டிபிகேட் கொடுக்கும்படி மனுதார் கேட்டிருக்கும் மனுவை 19-2-48 ல் விசாரிக்கப்படும். ஆக்ஷேபனை செய்ய விரும்புபவர்கள் அன்று காலை 11-மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராகி ஆக்ஷேபனையைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

M. சீனிவாச அய்யங்கார்,
மனுதார் வக்கீல்.

பலி பீடத்திலே

4-ம் பக்கத் தொடர்ச்சி

இருட்டறையிலே இருந்துழலுவோர்முன் விளக்கொளி காட்டுவது, விவேகமா, தீதா? நோய் கொண்டோருக்கு, மருந்தூட்டுவது முறையா, தவறு? சாந்தியால் உலகம் தழைக்கவேண்டுமென்றுரைப்பது அழகா, அநீதியா? மதவடுகளிலே காணப்படும் ஆபாசங்களை எடுத்து விளக்கி, மணியின் மாசு போகத் துடைப்பதுபோல், மார்க்க சம்பந்தமாக உள்ள மாசுகளை அறிவுக்கோல் கொண்டு துடைப்பது தானே கடமை! என்றெல்லாம் இன்று கேட்டால், "ஆம்! தடை என்ன? செய்யத்தான் வேண்டும். வைரம் ஜொலிக்க வேண்டுமானால் சாணை பிடிக்கத்தான் வேண்டும். வெட்டி எடுத்துச் சுத்தம் செய்து கனலிலிட்டுக் காய்ச்சி அடித்து எடுத்தால் மட்டுமே, தங்கம் தகதகவெனப் பிரகாசிக்கும்" என்று பலர், பதில் கூறுவர்; மனமாரக் கூறாவிடினும், வாயாறவாகிலும் கூறிடுவர். இந்த அளவு கேட்கும் உரிமையை உலகம் பெற்றது, வாயில்லாப் பூச்சிகளாக பெரும்பான்மையினர் இருந்தபோது, வந்தது வரட்டும் என்று துணிந்து, தீயில் குதித்தேனும் திட்டுவேன் திருப்பாதை என்று தீரமாகப் புகன்றதாலேயேயாகும்.

ஆமாம், ஆபாசந்தான், அறிவுக்கு ஏற்றதாகவும் இல்லை வாதத்திற்கு நிற்காது, இருந்தாலும், ஆதிநாளிலே ஏற்பட்டதாயிற்றே. பலப்பல காலமாக உண்மை என்று மக்கள் நம்புகின்றனரே அந்தக் கொள்கைகளைக் காப்பாற்றக் கட்டப்பட்டுள்ள கோட்டைகள் பல உள்ளனவே! அந்தக் கோட்டைகளைச் சுற்றிக் காவல் புரிவோர் அநேகர் உள்ளனரே அவர்களுக்குக் கேடயமாக அதிகாரம் இருக்கிறதே! நாம் என்ன செய்ய முடியும்? என்று வாதிட்டு, சமாதானம் பெற்று, ஆமைகளாக இன்றும் பலர் இருப்பதுபோல், எல்லோருமே இருந்துவிட்டிருந்தால், கருத்து வளர்ச்சி, காட்டுமிராண்டிக் காலத்திலேயே இருந்திருக்குமன்றோ! மனதில் உண்மையெனக் கொண்டதைக் கூறிடுவோம், அதைத் தடுக்க எத்தனை பட்டாளங்கள் கூட்டி வரப்பட்டாலும் பயங்கொள்ளோம், என்றுரைத்த வீரர்கள், அறிவுத்துறையிலே அவ்வப்போது கிளம்பியதால் மட்டுமே, அறிவு வளர்ச்சி இவ்வளவு கிடைத்தது! உழுத பிறகுதானே விதை தூவமுடியும்! உழுத ஏறுகள், பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல!

நாத்திகம் பேசினாலும், "அவன் தண்டிக்கட்டும்" என்று விட்டுவிடும் அளவு, மதவாதிகள் இதுகாலை தமது சுருதியை இறக்கிக்கொண்டனர். ஆனால் ஆரம்பத்திலே, அவர்களின் உக்கிரம், இவ்வளவு அவ்வளவு என்று அளவிட முடியாததாகவே இருந்தது.

ஆண்டவனைப் பற்றியோ, அவனடியார்களைப் பற்றியோ, கூறப்பட்டுள்ள பல அற்புத நிகழ்ச்சிகளைப் பற்றி, இன்று அறிவாளிகள், தத்துவார்த்தமே கூறுகின்றனர். இத்தகைய தத்துவார்த்த விளக்கமும், தண்டிக்கப்படவேண்டியகுற்றமாகப் பிரிட்டிஷ் நீதிமன்றத்திலே கருதப்பட்ட காலம் உண்டு! நினைப்பிற்கெட்டாத காலத்திலல்ல! 1728-ல் நடந்தது இத்தகைய சம்பவம்.

தாமஸ் உல்ஸ்டன் என்பவர், ஆத்திகர், கிருத்தவர், அறிவாளி, பாதிரி! அவர் நூலொன்று எழுதினார் 1726-ல். அதிலே அவர் ஏசுநாதர் செய்து காட்டியதாகக் கூறப்படும் அற்புதங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து காட்டி, அவைகளைத் தத்துவார்த்தமாகக் கொள்ள வேண்டுமே தவிர, அப்படியே நடந்தனவென்று கொள்ளக்கூடாது; அவ்விதம் கொள்வது பகுத்தறிவாகாது, அறிஞர்கள் எள்ளி நகையாடுவர், என்று விளக்கினார். வேதத்திற்கு விவேக விளக்கமுரைத்தார்! இதுதான் அவர் செய்த பெரும் பிழை!

அந்த நூலுக்கு மக்கள் பெருத்த ஆதரவளித்தனர். 30,000 பிரதிகள் விற்றன! பாதிரிகளின் உலகம் பதைத்தது! இவனோர் நாத்திகன்! ஆண்டவனின் லீலைகளைப் பற்றிக்கேலி செய்கிறான். இழித்தும் பழித்தும் எழுதி மக்கள் உள்ளத்தைப் பாழ்படுத்துகிறான். ஆத்திகத்தை அழிக்கிறான். அறிவு எனும் சம்மட்டி கொண்டு, மதக்கோட்டையை இடிக்கத்துணிகிறான். இவனை ஒழித்தாக வேண்டும், என்று மதஆதிக்கக்காரர்கள் மாரடித்துக் கொண்டனர்! மதவாதியின் மதிவழியே மன்னர்கள் செல்வது முறையன்றோ! எனவே, உலஸ்டன், மீது வழக்குத்தொடரப்பட்டது. நீதிபதி "ஆம்! இவன் தேவநிந்தனையே செய்தான். தண்டனைக்கு உரியவனே!" என்று தீர்ப்பளித்தார். 1729-ம் ஆண்டு மார்ச்சு மாதம், தத்துவார்த்த விளக்கம் எழுதியகுற்றத்திற்காக தாமஸ் உல்ஸ்டன், ஓராண்டு சிறைத்தண்டனையும், 100 பவுன் அபராதமும் தரப்பட்டதுடன், 2000 பவுன் சொந்த ஜாமீனும், 1000 பவுனுக்கு இருவரும், 500 பவுன்வீதம் நால்வரும் ஜாமீன்கொடுத்து, நன்னடக்கைக்கு உத்தரவாதமளிக்கவேண்டும் என்றும், இல்லையேல் ஆயுள்வரை சிறையிலே இருக்கவேண்டுமென்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது! ஜாமீன் கட்டப்படவில்லை. ஆயுள்வரைசிறை கிடைத்தது, சீலத்தைப் புகுத்தச், சொந்த அறிவுடன், அற்புதங்களுக்குத் தத்துவார்த்த உரை எழுதிய அறிவாளிக்கு. நாலுஆண்டுகள் சிறையில் கிடந்து, சிறையிலேயே மாண்டார்.

* * *

புத்தகம் எழுதுவதும் வெளியிடுவது மட்டுமல்ல, விற்பதற்கும் தண்டனை! தாமஸ்பேயின் எனும் தீவிரவாதி எழுதிய மனிதனின்உரிமைகள் என்ற புத்தகத்தின் இண்டாம் பாகத்தில் ஒரே ஒரு பிரதி விற்ற ஒரு ஏழைபுத்தக வியாபாரிமீது சட்டம் பாய்ந்தது! 1797, ஜூன்மாதம், தாமஸ் வில்லியம்ஸ் என்ற கிழவன் மீது கடுங்கோபங் கொண்டனர். "கேடுகளையும் கழகம்" என்ற சங்கத்தினர் புத்தக வியாபாரிமீது வழக்குத் தொடுத்தனர். கழகத்தின் சார்பாக, தாமஸ் எர்ஸ்க்கைன், எனும் வழக்கறிஞர்ஆஜராகி, வாதம் புரிந்தார். கென்யான்பிரபு, நீதிபதி. அவர் இத்தகைய நிந்தனைக்காரனின் நீசப்புத்தகத்தை விற்றவனைத் தண்டிப்பதே முறை என்று கருதினார். தீர்ப்புக் கூறுவதற்குச் சின்னாட்களுக்கு முன்பு, வழக்கறிஞர் எர்ஸ்க்கைன், உலவச்செல்கையிலே, ஒரு மூதாட்டி, அவரை இழுத்துக்கொண்டுபோய், நோய்வாய்ப்பட்டு நொந்து கிடந்த தாமஸ் வில்லியம்ஸ் என்ற புத்தக வியாபாரியையும், அம்மைநோயால்தாக்குண்டு தவித்துக்கிடந்த அவனது மக்களையும் காட்டினாள். எர்ஸ்க்கைனின் மனம் இளகி, "கேடுகளையும் கழகத்தாருக்கு"வழக்கை வாபீல் வாங்கிக்

(2-ம் பக்கம் பார்க்க)

சக்கர நெறி!

கலிங்கப் போரிலே, அசோக மன்னர் உண்மையிலேயே, மகத்தான வெற்றி பெற்றுவிட்டார்—எவ்வளவு பெரிய போருக்குப் பிறகுங்கூட எந்த மன்னரும் பெற்றறியாத பெரும் வெற்றி அது — போர் கூடாது என்ற புனிதக் கொள்கை அவர் மனதிலே ஆழப் பதிந்துவிட்டது—அதுவே அவர் பெற்ற மகத்தான வெற்றி, மற்ற யாரும்பெறாத, பெற முடியாத வெற்றி.

கடும்போரிலே தன் படை வெற்றி பெற்றது கேட்டு, எந்த மன்னனும் களிப்புறுவான். சற்று தெளிவற்ற மன்னன் கர்வம் கொள்வான். யூகமுள்ளவன், வெற்றியின் பயனாக, வேற்று வேந்தர்களுக்குப் பொறாமை மூண்டெழக்கூடும், அதனால் புதிய பகைவர் தோன்றக்கூடும், வீழ்ந்த நாட்டிலே, இரகசியக் கூட்டம் சதி புரியக்கூடும், தனது நாட்டிலேயே இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றோம் நம் வீரத்தால் என்று இறுமாந்து படைப் பிரிவுகளின் தலைவர்கள், பட்டத்தை ஏன் தாம் தட்டிப் பறித்துக் கொள்ளக்கூடாதென்று கெட்ட எண்ணம் கொள்ளக்கூடும், என்ற இத்தகு நிலைமைகளைப்பற்றி யோசித்து, ஆவன செய்ய முற்படுவான். மதோன்மத்தனாக இருப்பின், வேலும் வாளும் வீசியது போதும், வேல்விழியாளையும் மதுக்கோப்பையையும் கொண்டுவா, விலகி நின்று, யாரையேனும் பாடச்சொல் என்று கட்டளையிட்டுக் கேளிக்கையில் மூழ்குவான். பக்திமானாக இருப்பின், ஆலயங்கள் சென்று வருவான். அசோகன், இவ்விதம் ஏதும் செய்யவில்லை. வெற்றி பெற்றான்—யோசித்தான்—எப்படி? எதில்? எதற்கு? இந்த வெற்றி—என்று யோசித்தான் — களத்திலே நின்ற எதிரிப் படைகளைவிட அதிக வீராவேசத்துடன், அவன் மனதிலே, எண்ணங்கள் ஒன்றோடொன்று போரிட்டன. இறுதியில் பெரும் வெற்றி பெற்றான் - போர் கூடாது—போரிலே பெறும் வெற்றி, வெற்றி அல்ல, என்ற புது உண்மையைப் பெற்றான். இந்த உண்மையைப் பெறுவதற்கு, அவன் நடத்திய மனப் போராட்டம், கொஞ்சமல்ல. வீரம், ஒரு சமயம் வீறிட்டெழுந்து, "நீ, போரே கூடாது என்று கூறினால், உன்னையொத்த மன்னர்கள், உன்னைக் கோழை என்று கருதுவர். தோள்வலி இழந்துவிட்டாய், எனவேதான் தோத்திரம் பாடி நிற்கிறாய் என்று கேலி செய்வார்கள். இதை நீ விரும்புகிறாயா?" என்று கேட்டது. வீரத்தின் வயப்பட்ட மன்னனை விவேகம், ஒரு கணம், விட்டுவைத்தது—பிறகோ, அவன் நெற்றியைத் தடவி, "விசாரப்படாதே வேந்தே! வீரத்தின் பேச்சு இப்படித்தான் இருக்கும்—சற்று காரமாக. கலங்காதே. நான் சொல்வதைக் கேள். வீரம், கூறுகிறது, வேந்தர் சிலர் கேலி பேசுவர் என்று. பேசுவர். மறுக்கவில்லை. ஆனால், வீரத்தின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, போர்க்கோலத்திலே இருந்தால், என்ன ஆகும் தெரியுமோ—எண்ணிப் பார்—பிணங்கள் கேலி செய்யும் உன்னை! ஆளவந்தவனே! மாளச் செய்கிறாயே, இதுவோ, அரசு!—என்று கேட்டுக் கேலி பேசும். அந்தக் கேலி மொழியைத் தாங்கிக்கொள்ள விருப்பந்தானா! வேந்தே! பிணம் கேலி பேசும்—அலங்காரச் சிங்காதனத்தின்மீது அமரும் உன்னைப் பார்த்து, அனாதைப் பிணம் கேலி பேசும். அதை மறவாதீர்." என்று கூறிற்று.

கலிங்கத்தை வென்ற காவலனை நாடு, புகழ்ந்தது! வெற்றிக் கொடிகள் விண்ணை முட்டின! காற்றிலே மிதந்து வந்தது காவலனைப் புகழ்ந்து பலர் பாடிய கீர்த்திச் சிந்துகள்.

அசோகனைவிட அகமகிழ்ச்சி கொள்ளக் கூடியவர்கள் யார் இருக்க முடியும்! அற்புதமான வெற்றி பெற்றுவிட்டான்; கடும் போருக்குப் பிறகு!

மக்கள் எண்ணினர் அவ்விதம். மன்னரின் மனமோ வெற்றிக் களிப்பிலே நாட்டம் கொள்ளவில்லை. மண்டலத்து மக்களெல்லாம் விழா கொண்டாடினர்—மன்னன் அதிலே கலந்து கொள்ள மனமின்றி இருந்தான். வீர ஒளியும் வெற்றி ஒளியும் வீசிடும் விழிகளுடன் விளங்கினர் மக்கள். துக்கம்தான், அசோகனின் கண்களிலே! ஏன்? கலிங்கத்தை வென்றான் காவலன்—அவனைக் கவலை, போருக்கு இழுத்தது—களைத்த நேரத்திலே! காவலன், கவலையை வீழ்த்தக் கடும் போரிட்டான்.

"காவலனே! ஏன் குனிந்த தலையுடன், எதையோ பறிகொடுத்துவிட்டது போல, ஆழ்ந்த யோசனையில் யோசனையில் மூழ்கிக் கிடக்கிறாய். நீ, வெற்றி பெற்றுவிட்டாய்—கலிங்கம் வீழ்ந்துவிட்டது!—அமைச்சரும் பிறரும், இந்தப் பேச்சைக் கூறினர்.

"கலிங்கம், மட்டுமா! வீழ்ச்சி அடைந்தது, அந்த நாடு மட்டுமல்ல!!"—அசோகனின் செவியிலே, இந்தச் சத்தமும் கேட்டது.

நகரிலே, விழா கொண்டாடும் வீரர்களும், அவர்களைப் புன்னகை மாலை சூட்டி வரவேற்கும் மாதரும், உலவினர். ஆனால், ஆங்காங்கு, கால் கை இழந்தவர்களும், அவர்களைக் கண்டு கலங்கிய அவர்தம் காதலியரும் கூடத்தான் காணப்பட்டனர்.

"அரசே! நூற்றைம்பது குதிரை வீரர்களுக்கு நடுவே சிக்கிக்கொண்டான், குணநாதன். அவனைத் துண்டு துண்டாக்கிவிடக்கூடிய நிலை. தன்னைச் சூழ்ந்துவரும் பேராபத்தைக் கண்ட குணநாதன், கலக்கமடைந்திருந்தால்,..........ஆனால் கலக்கம் துளியும் கொள்ளவில்லை. பேரிரைச்சல்! அவன் பீதி கொள்ளவில்லை. உடைவாளை உருவினான்—ஒன்று, இரண்டு, மூன்று — எதிர்ப்பட்ட கலிங்கரின் தலைகள், உருண்டன கீழே! குதிரை, சுழற்காற்றாகி விட்டது. குணநாதன் ஒருவன்தான்! ஆனால் அந்த நேரத்தில் அவன் ஒருவனே, பல, குணநாதனாகி விட்டான். கிழக்கே, மேற்கே, வடக்கே, தெற்கே, எந்தத் திக்கிலேயும் அவன் காணப்பட்டான். இங்கொருவன் அங்கொருவன், வீழ்ந்தான்—தன்னைச் சூழ்ந்துவந்த, வரிசையைப் பிய்த்து எறிந்து, வெற்றியுடன், நமது படைவரிசை வந்து சேர்ந்தான். ஆற்றல் மிக்க குணநாதனுக்கு, இந்த கல்லிழைத்த, கேடயத்தைப் பரிசளிக்க, வேண்டுகிறேன்........"

அமைச்சன், கூறிமுடித்தான் அசோகன், யாருக்காகவோ, இவை பேசப்பட்டன என்று எண்ணிக்

கொண்டவன் போலிருந்தான். குணநாதனுக்குக் கேடயத்தைப் பரிசளிக்கும்போதுகூட மன்னன் முகத்திலே மலர்ச்சியோ, உணர்ச்சியோ, தோன்றவில்லை. மன்னனின் நிலைமை கண்டு, மற்றவர்கள் சற்று அஞ்சவும் செய்தனர். பெரும்போர்—மனதிலே, பெரியதோர் அதிர்ச்சி—அந்த அதிர்ச்சியின் விளைவே, இந்த நிலை, என்று எண்ணினர்.

மன்னரின் மனதிலே அதிர்ச்சி ஏற்பட்டது மட்டும் உண்மை. ஆனால், அந்த அதிர்ச்சி கலிங்கப் போரின் கடுமையால் மட்டும் ஏற்பட்டதல்ல; போரின் சூழ்நிலைக்குப் பிறகு, வெற்றி கிடைத்தது, என்ற முரசொலி கேட்ட பிறகு, ஏற்பட்ட அதிர்ச்சி அது........?

வெற்றி! வெற்றி! வெற்றி! முரசுகள் முழங்கின.

மன்னன் மனதிலே, சம்மட்டி கொண்டு யாரோ தாக்குவதுபோன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டது.

வெற்றி! — யாரோ, கூறிவிட்டு, கேலியாகச் சிரிப்பது போன்ற சத்தம், மன்னனுக்குக் கேட்டது.

கண் இழந்தவன்! கரம் இழந்தவன்! கால் இழந்தவன்! குதிரையின் காலிலேசிக்கி உயிரிழந்தவன்! யானையின்காலில் சிக்கிக் கூழாக்கப்பட்டவன்! பிணங்கள்! அவைகளைக்கொத்தும் பெரும் பறைவகள்! தேர்கள்! சக்கரங்களிலே சிக்கிச் சிதைந்த உருவங்கள்!—இங்ஙனம் பலப்பல தோன்றின—வெற்றி! வெற்றி! வெற்றி! என்று கூவியபடி!

மன்னரின் மனம் மருண்டது. வெற்றி! — யாருக்கு? — தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். பல முறை.

இதுவா வெற்றி! அழிவுக்குப் பெயர் வெற்றியா? பிணக்குவியலுக்குப் பக்கத்திலே நிற்பது தான் வெற்றியா! மக்களைக் கொன்று குவிப்பதற்குத்தான் வெற்றி என்று பெயரா?

கோரியது கிட்டினால், வெற்றி தானே அது.—யாரோ கேட்கிறார்கள் மன்னனை.

“ஆமாம்!” — மன்னன் பளிச்செனப் பதிலளிக்கிறான், ஆனால்மறுகணம் திகைக்கிறான். பூங்காவிலே புதுமலர் பூத்திடக்கண்டதும் தோட்டக்காரன், வெற்றி, வெற்றி என்று களிப்புடன் கூறலாம்—வெற்றி அது—நான் பெற்றது வெற்றியா! இருந்ததை அழித்தேன்! இது வெற்றியா! பிணநாற்றம் எங்கும் பரவச்செய்தது வெற்றியா! இதுவா, வெற்றி!-என்மனதிலே, அந்தத் தோட்டக்காரனுக்கு ஏற்படும் களிப்புப்போல எழவில்லையே.” — மன்னன் ஏக்கமுற்றான். தூக்கம் பிடிக்கவில்லை. தர்க்கித்தான்—முடிவு சுலபத்திலே பெற முடியவில்லை. உடைவாளைக் கண்டால் உற்சாகம் பிறக்கிறது, அதிலே இருந்த இரத்தக்கறையைக் கண்டால் உள்ளம் துடிக்கிறது! பணிந்த கலிங்கத்தை நினைத்தால், பெருமை எழுகிறது, குவிந்த பிணங்களை எண்ணிக்கொண்டாலோ பெரியதோர் சுமை, மனதிலே புகுந்து விடுகிறது. அசோகன் சோகத்திலாழ்ந்தான்.

சாம்ராஜ்யாதிபதியின் மனப் போராட்டம், சபலசித்தமுடையவரைப் பித்தராக்கி விட்டிருக்கக் கூடியது. இலேசில் மடிய மறுத்தன, அரசப் பண்புகள் என்று கருதப்பட்டுவந்த, வீரம், கௌரவம், மண்ணாசை, ஆதிக்கப் பிரியம், ஆடம்பர வேட்கை, போன்ற பல்வேறு எண்ணங்கள்.

கடும்போருக்குப் பிறகு, கலிங்கம் கொண்ட காவலன், ஓர் முடிவுக்கு வந்தான் — போர் இனிக்கூடாது என்று!

மன்னரின் மனதிலே இப்படிப் போர் மூண்டது, மக்களுக்கு என்ன தெரியும். அதிலும் கலையில் கருத்தைச் செலவிட்டு வருபவருக்கு, எப்படித் தெரியும்! ஏன் தெரிந்துகொள்ள முயற்சிக்கப் போகிறார்!!

ஓவியக் கலை நிபுணரொருவர், மன்னரின் வெற்றியால் மகிழ்வெய்தி, அந்த வெற்றியை, விளக்க, ஓர் அருமையான ஓவியத்தைத் தீட்டினார். மன்னரும் படைகளும், நாட்டின் கீர்த்தியை நிலைநாட்ட இரத்தம் சிந்தினர்—நாம் அவர்களின் கீர்த்தியை நிலைநாட்ட, கலையைக் காணிக்கையாக்குவோம், என்று அவர் எண்ணினார். எவரும் எண்ணுவர்!

தன் திறமையை எல்லாம் செலவிடுகிறார் கலைஞர். பார்த்துப் பார்த்துத் திருத்துகிறார். அருகே நின்று கவனிக்கிறார்—சற்றுத் தொலைவில் இருந்து பார்க்கிறார்—அந்தப் பக்கம் இந்தப் பக்கம், வட்டமாக, வளைவாக, மேலிருந்து கீழ், இடமிருந்து வலம், இப்படி எல்லாம், அவருடைய தீட்டுக்கோல் செல்கிறது, வண்ணக்கலயங்களிலே, அவருடைய வியர்வைகூட விழுகிறது. சளைக்காமல் தீட்டுகிறார், சாம்ராஜ்யாதிபதி பெற்ற வெற்றியை விளக்கும் ஓவியத்தை. அவரும் முடித்தார்—மன்னரின் மனப் போரும் முடிந்தது. இருவருக்கும் ஒருவர் நிலை மற்றவருக்குத் தெரியாது.

அரச மன்றம் சென்றார் ஓவியர்! பொது மண்டபமல்ல — முக்கியமான, அலுவல்களை மட்டுமே கவனிக்கக்கூடும் இடம். கலைவாணருக்கு அங்கும் செல்ல உரிமை உண்டு. மன்னர், தாம் கண்டறிந்த புது உண்மையைக் கூற, மந்திரியில் சிலரை வரவழைத்திருக்கும் நேரம் அது.

ஓவியர் வணங்கி நின்றார்—மன்னர் உபசரித்தார்.

“மன்னர் மன்னவா! கலிங்கத்திலே தாங்கள் கண்ட வெற்றி....” என்று விளக்கம் கூறியபடி, ஓவியச் சுருளை மன்னரிடம் கொடுத்தார். “கலிங்கத்திலே நான் கண்ட வெற்றி! அதற்காக........” மன்னன் குரலிலே, கேலி தொனித்தது.

என் முழுத்திறமையை உபயோகித்து, ஓர் அழகிய ஓவியம் வரைந்திருக்கிறேன்—சாம்ராஜ்ய சிறப்பினையும், தங்கள் சௌரியத்தையும்,........ஓவியர், விளக்கலானார்.

விளக்கி இருக்கிறீரோ.... ....?—மீண்டும் கேலியாகவே மன்னன்பேச, ஆச்சரியப்பட்ட ஓவியர் “ஓவியத்திலே, தீட்டி இருக்கிறேன்....என்று பணிவுடன் பதிலளித்தார்.

மன்னன், அந்தப் படத்தை வாங்கிப் பார்த்தான். ஓவியக்காரனின் உள்ளம் படபடவென்றடித்தது, மன்னரின் மனதை மகிழ்விக்குமோ இல்லையோ, தன் திறமை, என்ற எண்ணத்தால்.

கலை நுட்பம் அறிந்த காவலன், கலைவாணர்களை மதிக்கும் போக்குடைய மன்னன், ஓவியச்சுருளை, ஒருபுறம் வைத்தான். ஓவியக்காரரைப் பார்த்தான், இலேசான புன்னகையுடன். எழுந்து உள்ளே சென்றான். ஓவியர், திகைத்துப் போனார். மன்னர், என்றுமே இதுபோல் அலட்சியப்படுத்தியதில்லை.—கலைவல்லவனுக்குக் கண்ணீர் ததும்பிற்று. தன் குழந்தையைப், பிறர் கண்டு, முகத்தைச் சுளித்துக் கொண்டால், தாய்க்கு எவ்வளவு துக்கமும் ஆத்திரமும் பிறக்கும். அந்நிலை பெற்

றுன் கலைஞன். ஓவியச்சுருளைத் தாவி எடுத்தான்—பிரித்துப் பார்த்தான்—மீண்டும் சுருளைக் கரத்திலே பிடித்த படி, போய்விடலாமா, என்று எண்ணினான்—மனம் இடம் தரவில்லை. ஆசனமொன்றில் அமர்ந்தான்—தன் நிலை மறந்து—நெடு நேரம்.

“இதோ ஓவியம்! உண்மை உருவம், கலிங்கக்காட்சி-படுகொலை – இரத்த வெள்ளம்-பிணக்குவியல்-செந்நிறம்-மேலே கழுகுகள் வட்டமிடுகின்றன பாரீர்—கீழே, குவியல்—பிணக்குவியல்—களத்திலே மடிந்தவர்கள்—கொல்லப்பட்டவர்கள்—என்றால் மடிந்தவர்கள்..........மன்னர் பேசிக்கொண்டே ஓர் ஓவியச்சுருளை நீட்டினார். அசோகனின் வெற்றி—ஆயிரமாயிரம் குடும்பங்களிலே அழுகுரல்! கலிங்கத்திலே படுகொலை—என்றால்—பகிரங்கப் படுகொலை—பெயர், போர். என் கீர்த்தி பரவ, இவ்வளவு பிணங்கள்—என் இராஜ்யம் வளருவதற்கு இவ்வளவு இரத்தக் காடு. பிரேத ராஜ்யம்! ஓவியரே! கலையைக் கறையாக்காதீர், படுகொலையை, மறைக்காதீர். வேண்டுமானால், என் உருவைத் தீட்டும்—உலகுக்கெல்லாம் காட்டும்—ஆம்! என் கழுத்திலே, மலர்மாலை இருப்பது போலத் தீட்டாதீர்—மண்டை ஓடுகளாலான மாலை இருப்பதாகத் தீட்டும்—அஞ்சாமல் படுகொலை செய்த அசோகன் என்று செந்நிறத்திலே ஓவியத்தின் கீழே, எழுதும். உலகு எள்ளிநகையாடட்டும், இந்த உயிர் குடிக்கும் உலுத்தனின் உருவப்படத்தைக் கண்டு. போர்—இனி இல்லை—இனிக் கூடாது. மன்னனின் பராக்கிரமம், மற்ற மண்டலத்தை ஜெயிப்பதனாலேயே நிலைநாட்டப்படவேண்டும் என்று நியதி இல்லை. அதுதான் அரச வம்ச திட்டம் என்றால், அசோகன் அரசனாக இருக்கமாட்டான்—அரசு, அழிவுத் தொழிலுக்குப் பயன்படுமானால், அசோகனுக்கு வேண்டாம் இனி ஆளும் வேலை.”—மன்னர் களைத்து உட்கார்ந்தார்—ஓவியர் மருண்டார். மந்திரியொருவர், மெல்லிய குரலில் பேசலானார், “மன்னரின் கீர்த்தி பரவாத மண்டலமே கிடையாது........” அசோகனின் குரலிலே மீண்டும் கேலி தொனித்தது.

“மன்னரின் கீர்த்தி—என் பொருட்டுப் போரிட்ட மகனை இழந்த தாயைக் கூப்பிட்டுக் கேள்—காதலனைக் களத்திலே கழுகு கொத்திற்று என்று அறிந்து கதறும் காதலியைக் கேள், சாம்ராஜ்யாதிபதி அசோகனின் கீர்த்தி எப்படிப்பட்டது— என்று..........கீர்த்தியா? அவருக்குக் கீர்த்தி தேடித்தர, எங்கள் குடும்பத்திலே அவதியா! அவருடைய மணிமுடி ஜொலிக்க, எங்கள் வாழ்வு இருண்டுபோக வேண்டுமா..........என்று கேட்பர்.” மன்னன் இவ்வாறு பேசக் கேட்ட மந்திரி, “ராஜத்துரோகம்—அவ்விதம் பேசுபவர் தேசபக்தராகார்.” என்று உறுதியுடன் கூறினார். மன்னர், பதிலளித்தார். ‘ராஜத் துரோகம்—தேசத்தின் பெயரைக் கூறிக்கொண்டு, போரில், மக்களை ஈடுபட வைத்து அவர்களை மடியும்படிச் செய்வது, மனிதத்துரோகம்—தர்மமல்ல— அன்பல்ல —அறிவுமல்ல—கேவலம் மிருக சுபாவம்—இரத்த வெறி—ஆதிக்கஆசை—பிணத்தைக் கண்டு பூரிக்கும் பேயின் புத்தி. போதும். எனக்கு இனிப் போரால் புகழ் வேண்டாம். எனக்குப் புகழ் தேடித் தருவதற்காக, வீர இளைஞர்களின் உடலிலே புண்ஏறவேண்டாம். அஞ்ஞானத்தை விரட்டும் போர்—வறுமையை விரட்ட ஓர் யுத்தம்—தொடுப்பேன்—அறிவை ஆயுதமாக்குவேன்—அன்பைப் படையாக்குவேன்—புதிய ராஜ்யங்கள் வேண்டேன், மக்களின் முகத்திலே புதிய மலர்ச்சி உண்டாக்கிக் களிப்பேன், அசோகன் அஞ்ஞானத்தை விரட்டி, அன்பை வளர்த்தான்—மக்களுக்கு இன்பவாழ்வு அளித்தான் என்று எதிர்காலம் கூறவேண்டும்.! சாம்ராஜ்யாதிபதி அசோகன், அனுப்பும் படை இது, என்று ஏக்கத்துடன் இனி எவரும் பேச வேண்டிய அவசியம் இராது. போரிடப் படைகளை ஏவுவதை நிறுத்திக் கொண்டேன், இனிப் போதகாசிரியர்களை திக்கெட்டும் அனுப்பி வைப்பேன், போர் முரசு கொட்டுவதை நிறுத்திக்கொண்டேன், இனி அன்பும் அறமும், என் முரசு!”

மன்னன், அதுவரை பேசியதில்லை, அவ்வளவு உருக்கத்துடன். ஓவியர் ஒருபுறம் மிரட்சியுடன். மந்திரிகள், வாய்பிளந்து நின்றனர். மன்னர், தன் சிரத்தைக் கரத்தால் பிடித்துக்கொண்டு, சிலவிநாடி மௌனமாக இருந்தார்—பிறகு, சபை கலையலாம் என்று ஜாடை காட்டி விட்டு, உள்ளே சென்றுவிட்டார்.

அசோகன், புதிய புதிய கட்டளைகள் பிறப்பிக்கலானான், தான் கண்டறிந்த புது உண்மைக்கு ஏற்றபடி—புத்தமார்க்கத்துக்கு உகந்தமுறையிலே, ஆனால் மற்ற மார்க்கங்களைக் கருவறுக்கும் திட்டத்துடனல்ல.

போர் இனி இல்லை.
வேட்டைகள் கூடாது

அரண்மனை விருந்துகளுக்கு
மாமிசம் வேண்டாம்

இப்படிப் புதிய கட்டளைகள் வெளிவந்தன—ஒவ்வொன்றும் ஒவ்வொரு அதிர்ச்சி தந்தது.

நாட்டிலே தர்மம் தழைக்க
வேண்டும்

இது போலோர் கட்டளை! மக்கள் மெள்ளப் பேசிக்கொண்டனர். “இது சொல்லித் தெரிய வேண்டியதல்லவே—அதர்மத்தை ஆதரிப்பதாக எந்த அரசும் கூறாதே—மன்னர், தர்மம் தழைக்கவேண்டுமென்று மற்ற மன்னர் யாரும் எண்ணாதது போல அல்லவா, கட்டளை பிறப்பிக்கிறார் தர்மத்தை ஆதரித்து, இது என்ன விந்தை” என்று.

விளக்கம் உடனே கிடைத்தது.

தர்மத்தை போதிக்க அதிகாரிகள்
நியமிக்கப்படுவர்

யார் இந்த, தர்மாதிகாரிகள்? பரம்பரை பாத்யதை கொண்டாடுபவர்களா? பர்ணசாலையிலே இருந்தவர் என்று விருது பேசுபவரா? வேடதாரிகளா! அல்ல! அல்ல! மன்னர், சிறந்த அறிஞர்களை, ஒழுக்கசீலர்களை, நாட்டிலே, சன்மார்க்கம் பரவச் செய்வதற்கான பணிபுரியும்படி நியமித்தார். அவர்கள் ஆஷாடபூதிகள் போல், ஆதிக்கம்பெற இதுவும் ஓர்வழி என்று இருந்துவிடவில்லை. மக்களின் மனமாசு போக்கலாயினர்.

பரம்பரை வைதீகர்கள் உண்மையாகவே பயந்தனர்—அசோகனின் திட்டம், தங்கள் ஆதிக்கத்துக்கு உலைவைக்கிறது என்பதை அறிந்த

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai M. A. at “Dravida Nadu” Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.